Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 11
இதழ்: 284
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் கார்த்திகை 9 றம்ழான் 13 திங்கட்கிழமை [24-11-69]

ஈழநாடு சந்தா
வாரப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற்பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒருவருடம் — ரூ. 66-00

# மாவை ஆலயபிரவேச வழக்குகள் தள்ளுபடி: சாட்சிகள் முரண்பாட்டால் எதிரிகள் விடுதலை

மாவிட்டபுரம், ஞாயிறு

மாவை ஆலயப் பிரவேச தடுப்பு வழக்குகள் இரண்டு மல்லாகம் நீதிபதியால் தள்ளுபடி செய்யப்பட்டன.

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் 67-ம் ஆண்டு உற்சவத்தின்போது ஆலயத்தில் பிரவேசிக்க முயன்றவர்களை தடுத்ததாகத் தெல்லிப்பளையைசேர்ந்த வி. விஜயகுமார், தம்பிப்பிள்ளை ஆகியோர் மீது காங்கேசன்துறை பொலிசார் மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

இவ்வழக்குகள் நேற்று விசாரணை செய்த மல்லாகம் நீதிபதி திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி சாட்சிகள் முரண்பாடு காரணமாக எதிரிகளை விடுதலை செய்தார்.

திரு. தம்பிப்பிள்ளை மீது தொடரப்பட்ட மற்றுமொரு வழக்கு விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ் விசாரணையின் போது எதிரி தரப்பு வழக்கறிஞர் இவ்வழக்கு முன்பு வழக்காளி தரப்பினர் வராததால் தள்ளுபடி செய்யப்பட்டதெனவும், இனி இதை புதுப்பிக்க முடியாது எனவும் சட்டங்களை எடுத்துகாட்டி வாதாடினர்.

இறுதியில் வழக்கு தீர்ப்பை, அடுத்த மாதம் 6-ம் திகதிக்கு நீதிபதி ஒத்தி வைத்தார்.

இவ்வழக்கில் எதிரிகளுக்காக வழக்கறிஞர் சி. சுந்தரலிங்கம் ஆஜராகியிருந்தார்,

ஆலயப்பிரவேச 9 தடுப்பு வழக்குகளில் இவைகளே இறுதியான வழக்குகள் என்பது குறிப்பிடத்தக்கது.

# திருமதி காந்தி தொடர்ந்து காங்கிரஸில் இருக்கிறார்

## அ. இ. கா. கமிட்டி தீர்மானம்

### நிஜலிங்கப்பா எடுத்த நடவடிக்கைகள் யாவும் ரத்துச் செய்யப்பட்டன

புதுடில்லி, நவ. 23

**திருமதி இந்திராகாந்தி மீதும் அவரை ஆதரிப்பவர்கள் மீதும் காங்கிரஸ் தலைவர் திரு. நிஜலிங்கப்பா எடுத்த எல்லா நடவடிக்கைகளையும் புதுடில்லியில் கூடிய அகில பாரத காங்கிரஸ் கமிட்டி இன்று ரத்து செய்து தீர்மானம் நிறைவேற்றியது.**

திருமதி காந்தியை காங்கிரஸ் கட்சியின் அடிப்படை அங்கத்தவர் நிலையிலிருந்து திரு நிஜலிங்கப்பா தலைமையிலான காரியக் கமிட்டியினர் நீக்கியதையும் இந்தக் கூட்டம் ரத்து செய்தது:

திருமதி காந்தி தொடர்ந்து காங்கிரஸ் கட்சியில் அங்கத்தவராகவும், ஆட்சிமன்றக் குழுவின் தலைவராகவும் இருந்து வருகிறார் என்றும் அத்தீர்மானம் கூறியது.

திருவாளர்கள் சுப்பிரமணியம், பக்ருதீன் அலி அகமத். திரு. சர்மா, அரோரா, சதிபூஷன் ஆகியவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் ரத்து செய்யப்பட்டன.

திருமதி காந்தி இன்று காலையில் அகிலபாரத காங்கிரஸ் கூட்டத்தில் பேசுகையில், காங்கிரஸ் வருடத்துக்கு வருடம் ஏற்றுக்கொண்டுள்ள சோஷலிசப் பொருளாதாரத் திட்டங்கள் நிறைவேற்றி வைக்கப்படும் என்றார். இதுசம்பந்தமாக காங்கிரஸ் முதலமைச்சர்கள் அழைத்து ஆலோசனைகள் கலக்கப்படுவார்கள் என்றும் பிரதமர் கூறினார்.

இந்தக் கூட்டத்தில் கட்சியின் இடைக்காலத் தலைவர்

## கட்டாக்காலி மாடுகள் தொல்லை நீக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

விளை பயிர்களை அழித்தும் சந்தைகள் முதலிய இடங்களில் நின்றும் பொதுமக்களுககும் வாகனப்போக்குவரத்துக்கும் இடைஞ்சலைக் கொக்டுகும் கட்டாக்காலி கால்நடைகளை பிடிப்பதற்கு மாநகரசபை வட்டாரங்களாகப் பிரித்து மாடு பிடிப்பதற்கு லைசென்ஸ் வழங்குவதென இச்சபை தீர்மானிக்கிறது.

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கூட்டம், இன்று மாலை நடைபெறும் போது திரு. எஸ். ஜே. அன்ரனி மேற்கண்ட பிரேரணையை கொண்டுவருவார்.

இக்கூட்டத்தில் திரு. தா. மார்க்கண்டு கீழ்க்காணும் பிரேரணைகளைக் கொண்டு வருவார். மராமத்து மேற்பார்வையாளர் ஒவ்வொருவரும் தங்கள் வேலையை மிக விரைவாகவும் குறைந்த செலவிலும் செய்துமுடிப்பதற்கு அவர்கட்கு தனியான கைவண்டி வழங்குவதென இச்சபை தீர்மானிக்கிறது

கொடியேற்றுத் திருவிழா அலங்காரத் திருவிழாக்களுக்கு மின்சாரம் இலவசமாக வழங்குவதென இச்சபை தீர்மானிக்கிறது.

திரு. எம். எஸ். பேரின்பநாயகம் கீழ்க்காணும் பிரேரணையைக் கொண்டுவருவார்.

குருநகரில் மீன் பிடித் தொழிலாளரது தேவைக்கு உதவுவதற்காக அமைக்கப்பட்ட பனிக்கட்டி உற்பத்தி நிலையம் அவர்களது தேவையை முதலில் பூர்த்திசெய்யாது வெளியூர்களுக்குப் பனிக்கட்டிகளை ஏற்றுமதி செய்வதால் இப்பகுதியில் வாழும் மீன்பிடித்தொழிலாளர் தமது தொழிலுக்குப் பனிக்கட்டி போதியளவு கிடையாது அவதியுறுகிறார்கள். எனவே அவர்களது தேவைகளைப் பூர்த்திசெய்த பின்பே வெளியூர்த் தேவைகளைக் கவனிக்க வேண்டுமென இச்சபை மீன்பிடிக்கூட்டுத்தாபனத்தைக் கேட்டுக்கொள்கிறது

## அசுத்தமான சீனி வினியோகம்

நெடுந்தீவு, ஞாயிறு

கடந்த வாரம்இங்கு வினியோகம் செய்யப்பட்டு இன்றுவரை நெடுந்தீவில் விற்கப்படும் சீனி மிகவும் அசுத்தமானதாகவும் தூசிகள் நிறைந்ததாகவும் இருக்

துறைமுக வேலைகளில்

## உள்ளூர் தொழிலாளருக்கு முதலிடம் வழங்க கோரிக்கை

மாவிட்டபுரம், ஞாயிறு

''காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி வேலைக்கான தொழிலாளரை தெரிவுசெய்யும்போது காங்கேசன்துறையிலுள்ள வேலையற்றவர்களை முதலில் தெரிந்தெடுத்த பின்பே யாழ் மாவட்டத்தில் உள்ள தொழிலாளர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படல் வேண்டும்''

இவ்வாறு கோரும் தீர்மானமொன்று காங்கேசன் துறைப் பட்டினசபையின் மாதாந்தக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

சபை மண்டபத்தில் உபதலைவர் திரு. ச. சிவனடியார் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நிறைவேறிய மற்றும் தீர்மானங்கள் வருமாறு:

காங்கேசன்துறையில் வேலையில்லாதிருப்பவர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுக்க தொழிற்கந்தோர் கிளையொன்றை காங்கேசன்துறையில் நிறுவ வேண்டும்.

தம் ஆசாரமுறைப்படி ஈமைக்கிரியைகளை செய்ய முடியாது கஷ்டமுறும் ஊறணிபகுதியிலுள்ள கிறிஸ்தவமதத்தவர்களுக்கு என புதிய சவக்காலை ஒன்றை அமைத்து கொடுக்கவேண்டும்.

இவை உட்பட மற்றும்பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஆட்சிமன்றத்திற்கு

## 'சிறுபான்மைத் தமிழர் ஒருவரை போட்டியின்றி தெரிவு செய்க'

### அரசியல் கட்சிகளுக்கு மகாசபை வேண்டுகோள்

யாழ்ப்பாணம், திங்.

'வடபகுதியில்உள்ள ஒரு தொகுதியிலிருந்து அடுத்த தேர்தலில், சிறுபான்மை தமிழர் ஒருவரை போட்டியில்லாமல் தெரிந்து அனுப்புவதற்கு, சகல அரசியல் கட்சிகளும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்' கொடித்தினமும் அனுஷ்டிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## சாகித்திய மண்டலம் பாராட்டும்

## இனிமேல் ஒரு அவுன்ஸ்

பச்சிலைப்பள்ளி, ஞாயிறு

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தில் பெருந்தொகைச் சீரகம் கையிருப்பிலுளளதால் இந்த மாதம் தொடக்கம் இதன் பங்கீட்டை இரட்டிப்பாக்க உணவுப் பொருள ஒருங்கிணைப்புக்குழு தீர்மானித்துளளது. இதனால்தற்சமயம் பங்கீட்டு முறையில் வழங்கப்படும் அரை அவுன்ஸ் சீரகம் ஒரு அவுன்ஸாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

## மீனவர் வலைகள் களவுபோகின்றன

நெடுந்தீவு, ஞாயிறு

நெடுந்தீவு மீனவர்களின் வலைகள் அடிக்கடி காணாமல் போகின்றனவாம் அதிகமாக படுப்பு வலைகள்தான் களவு போகின்றனவாம், கடலில் தங்கள் திருக்கை வலைகளை விரித்துவிட்டு மறுநாள் வலைகளை பார்க்கச் சென்றால் அங்கு வலைகளைக் காணாது கவலை தோய்ந்த முகங்களோடு கரைவந்து சேருவது சோகக்காட்சியாகவேயிருக்கிறது.

இப்படிக் களவு கொடுக்கும் மீனவர்கள் மீண்டும் புது வலைகளை தயாரித்துக் கொண்டுபோய் பயத்துடன் தான் கடலில் விட்டுவிட்டு வருகிறார்கள். அவையும் களவுபோய் விடுகின்றனவாம். இதனால் மீனவர்கள் மத்தியில் கவலையும் பீதியும் ஏற்பட்டுள்ளது.

## சேதம்

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் கிராமசபைப் பகுதியில் நூற்றுக்கு அதிகமான பனை மரங்கள் அடியோடு பாறியும், இடையில் முறிந்தும் பலத்த சேதத்துக்குள்ளாகியுள்ளன.

ஐந்து நிமிடம் வீசிய கடும் காற்றினாலேயே இச் சேதம் ஏற்பட்டது. தெய்வாதீனமாக எவர் மீதிலும் பனை மரம் விழவில்லை.

## பாதிப்பு

நெடுந்தீவு, ஞாயிறு

கடந்த ஐந்து நாட்களாக ஓயாது பெய்த மழை வெள்ளப் பெருக்கை உண்டாக்கியுள்ளது. பலருடைய வீடுகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. மீனவர்கள் பலர் மீன் பிடிக்கச் செல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible]
பிரேரணைகளைக் கொண்டு வருவார். மராமத்து மேற்பார்வையாளர் ஒவ்வொருவரும் தங்கள் வேலையை மிக விரைவாகவும் குறைந்த செலவிலும் செய்துமுடிப்பதற்கு அவர்கட்கு தனியான கைவண்டி வழங்குவதென இச்சபை தீர்மானிக்கிறது

[illegible] கிடையாது அவதியுறுகிறார்கள். எனவே அவர்களது தேவைகளைப் பூர்த்திசெய்த பின்பே வெளியூர்த் தேவைகளைக் கவனிக்க வேண்டுமென இச்சபை மீன்பிடிக்கூட்டுத்தாபனத்தைக் கேட்டுக்கொள்கிறது

அட்டன் பொதுமறைக் கழகம் நடத்திய

## திருக்குறள் ,எழுத்துத்தேர்வில் பதக்கங்கள்,சான்றிதழ்கள் பெற்றோர்

அட்டன், ஞாயிறு

திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டு விழாவையொட்டி அட்டன் பொதுமறைக் கழகம் அகில இலங்கை ரீதியாக மாணவர்களுக்கு நடாத்திய திருக்குறள் - எழுத்துத்தேர்வுகளுக்குத் தோற்றி பதக்கப் பரிசில்களையும் தகைமைச் சான்றிதழ்களையும் பெற்றவர்கள் விபரம் வருமாறு:

பதக்கப் பரிசில்கள் பெற்றவர்கள்: ஆரம்பபிரிவு- செல்வன் இரா. சக்கரவர்த்தி. செல்விகள் வசந்தி சிறினிவாசன், கலையரசி சின்னையா, புஷ்பலீலா இராமலிங்கம், கமலாதேவி செல்லையாபிள்ளை, கலாதேவி வையாபுரி.

கீழ்ப்பிரிவு- செல்வன் தே. சக்கரவத்தி, செல்விகள் ஜெயராணி கந்தசாமி, ஜெயபாய் சாமிதாஸ், வைடூரியம் வில்லியம், பரம்சோதி, இலெட்சுமணன்.

மத்தியபிரிவு- செல்வன் கோ திருப்பதி, செல்விகள் லிங்கேஸ்வரி அழகரத்தினம், ஜெயராணி கந்தசாமி, சித்திமர்யூன் அப்துல் அகமட், பத்மினி கருப்பையா.

தகைமைச் சான்றிதழ்கள் பெற்றவர்கள்: ஆரம்பபிரிவு செல்வன் கோ. மதிவண்ணன், செல்விகள் இ. திலகவதி, வை கௌசல்யா, சொ. கனகேஸ்வரி, அ. சகுந்தலா, வை. ஜோதி, சி. சுமதி, க. இரத்தினேஸ்வரி, இ. புவனசுந்தரி, நா. தனலட்சுமி, க. தேவகியம்மா செ: கலாமதி.

கீழ்ப்பிரிவு: செல்வன்கள் மு. சதாசிவம், க நீலவர்ணன், வை. சுந்தரலிங்கம், அ. கோபால்சாமி, க. மோகன், வை. மனோகரன், மு. ஜெயராஜ், ம. கணபதி, மு. இராமசாமி, அ. பூபாலசிங்கம், வை. அருணசலம், இ. இராமநாதன் து நித்தியானந்தன், மு. பரமானந்தம், இரா. ஆனந்தராசா, தே. மோகன், மு. ரெங்கராஜ். இ. ரெங்கநாதன், செல்விகள் அ. பரமேஸ்வரி, தே. இராஜேஸ்வரி, சி. இரட்ணமாலா, மு. தேவி இரா. புஷ்பலீலா. பெ. வசந்தாதேவி

மத்திய பிரிவு: செல்வன்கள் அ. தியாகராசா, கி. சோமசேகரம், வை. இராஜரட்ணம், மு. பரமானந்தம், வை. பாண்டியன், இரா. முத்துசாமி, சி. முனுசாமி, ரெ. ஜனார்த்தனன், கோ. முத்துக்கருப்பன், வே. யோகநாதன். செல்விகள் க. இராஜேஸ்வரி, த. வசந்தா, இரா யோகேஸ்வரி, க. சத்தியபாமா, தே. இராசேஸ்வரி, பெ. வனஜா, க. ஜெயகுமாரி, க. தனலட்சுமி, அ. புஷ்பம், சி. இரட்ணமாலர, அ. விஜயலட்சுமி.

---

## ஆசிரியர் சீற்றம்

பருத்தித்துறை, ஞாயிறு

எவ்வித முன்னறிவித்தலுமில்லாமல் வருமானவரித் திணைக்களம் ஆசிரியர்களின் மாதச் சம்பளத்தில் அரைவாசிக்கு மேற்படக் கழிப்பதால் பல குடும்பங்கள் வாழ்க்கைச் செலவுகளுக்குக் கடன்பட வேண்டியுள்ளதாகப் பல ஆசிரியர் குறைகூறுகின்றனர்.

ஓர் ஆசிரியரிடமிருந்து உரிய ஆண்டுக்கு எவ்வளவு பணம் அறவிடப்படுமென்றும், அதன்பின் மாதவீதம் அத்தொகை கழிக்கப்படுவதற்கான முன்னறிவித்தல் கொடுத்த பின்னரே கழிக்கப்படுவது இதுவரை நடைமுறையிலிருந்த விதியாகும். அவ்வாறு கழிக்கப்படுவதால் ஆசிரியர் முன்கூட்டியே தமது செலவுகளைக் கட்டுப்படுத்த முடியும். இது விடயமாகப் பாதிக்கப்பட்ட ஆசிரியர்வருமானவரி ஆணையாளர் திரு. எஸ். சிற்றம்பலத்துடன் நேரடித் தொடர்பு கொண்டுள்ளதாகத் தெரிகிறது மேலும் பலவருடங்களுக்கான வருமானவரி ஒரே மாதத்திற் க்ழிக்கப்படும் நிலைமையும் சில ஆசிரியருக்கேற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## சீனி வினியோகம்

நெடுந்தீவு, ஞாயிறு

கடந்த வாரம்இங்கு வினியோகம் செய்யப்பட்டு இன்றுவரை நெடுந்தீவில் விற்கப்படும் சீனி மிகவும் அசுத்தமானதாகவும் தூசிகள் நிறைந்ததாகவும் இருக்கின்றது. இவற்றைப் பாவிக்கும் குழந்தைகள், நோயாளர் உட்பட பலரும் பெரிதும் பாதிக்கப்படுவதால் பலர் யாழ்ப்பாணத்திலிருந்து சீனியை வாங்கி வருகிறார்கள்.

---

## நீரில் மூழ்கி மரணம்

மாத்தளை, ஞாயிறு

மாத்தளை சென்ற்தோமஸ் கல்லூரியைச் சேர்ந்த லியனகே, குலாவ என்கின்றஇரு மாணவர்கள் சுதுகங்கையில் நீராடச் சென்றவிடத்தில் நீரில் மூழ்கி மரணமடைந்தனர்.

ஆற்றின் அடித்தளத்தில் பாறைகள் மத்தியில் அகப்பட்டிருந்த இவர்களது சடலம்இரண்டு நாட்களின் பின்னரே மீட்கப்பட்டன.

அரோரா, சதிபூஷன் ஆகியவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் ரத்து செய்யப்பட்டன.

திருமதி காந்தி இன்று காலையில் அகிலபாரத காங்கிரஸ் கூட்டத்தில் பேசுகையில், காங்கிரஸ் வருடத்[...]கள் நிறைவேற்றி வைக்கப்படும் என்றார். இதுசம்பந்தமாக காங்கிரஸ் முதலமைச்சர்கள் அழைத்து ஆலோசனைகள் கலக்கப்படுவார்கள் என்றும் பிரதமர் கூறினார்.

இந்தக் கூட்டத்தில் கட்சியின் இடைக்காலத் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் பேசுகையில், நாட்டு மக்களின் புதிய நம்பிக்கைகள் யாவும் நிறைவேற்றி வைக்கப்படும் என்றார். பழைய தோழர்களைப் பிரியவேண்டியது தவிர்க்கமுடியாததாகி விட்டது என்றார். அடுத்த சில வாரங்களுக்கு காங்கிரஸ் கட்சியை சரி செய்வதில் தமக்குநிறைய வேலை இருக்கும் என்றார் திரு. சுப்பிரமணியம்.

கூட்டத்துக்கு வந்திருப்பவர்களின் எண்ணிக்கையை மறுதரப்பினர்கள் மறுப்பது பற்றி அவர் குறிப்பிடுகையில், உண்மையை மறுப்பவர்கள் கனவுலகிலேயே இருக்கட்டும் என்றார்.

காரியக்கமிட்டிக்கு திரு. சுப்பிரமணியம் பத்துப் பேர்களின் பெயர்களை அறிவித்தார். அகில பாரத காங்கிரஸ் கமிட்டியிலும் பத்துப் பேரைத் தெரிவு செய்தது.

## 'நாத்திகம்' ராமசாமிக்கு அபராதம்

சென்னை, நவ. 23

அவதூறான செய்தியொன்றை வெளியிட்டதற்காக 'நாத்திகம்' ராமசாமிக்கு ரூ. 1000 அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கோவை அரசாங்க ஆஸ்பத்திரி டாக்டர்கள் மீது அவதூறாக ஒருசெய்தி வெளியிடப்பட்டதாக 'நாத்திகம்' பத்திரிகை ஆசிரியராக இருந்த ராமசாமிமீது வழக்குத் தொடரப்பட்டது. இவ்வழக்கில் ராமசாமிக்கு அபராதம் விதித்து அபராதம் கட்டத் தவறினால் 6 மாதக் கடுங்காவல் தண்டனை அனுபவிக்கவேண்டுமென நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

---

## சுருட்டுத் தொழிலாளரின் கூலியைக்கூட்டவேண்டும்

யாழ்ப்பாணம். திங்கள்

அரசாங்க ஊழியர்களுக்கும், தனியார்துறை ஊழியர்களுக்கும் சம்பள உயர்வு வழங்கப்படுவது போல், வாழ்க்கைத்தர உயர்வால் கஷ்டப்படும் சுருட்டுத் தொழிலாளர்களின் கூலியையும் 15 ரூபாவாக கூட்ட வேண்டும்.

அகில இலங்கை ஐக்கிய சுருட்டுத்தொழிலாளர் சங்க தலைவர் திரு. ஏ. துரைராஜசிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுருட்டுத் தொழிலாளரின் கூலி உயர்வு பற்றி முடிவுசெய்ய உடனடியாக சம்பள நிர்ணய சபையைக் கூட்ட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது: மற்ற ஊழியர்களின் சம்பள உயர்வுடனும் வாழ்க்கைத் தரத்துடனும் ஒப்பிடும் புள்ளிவிபரத்தின்படி சுருட்டுத்தொழிலாளருக்கு கூலி 15 ரூபா 60 சதமாக உயர்த்தப்படவேண்டும்.

வடபகுதியில் உள்ள சுருட்டுத் தொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் கூடி, கூலி உயர்வு பற்றியும், மற்றும் விஷயங்கள் பற்றியும்முடிவு செய்வார்கள்.

## இரு ஆண்டுகளாக பழுதடைந்தது விரைவில் சேவைக்குவரும்

யாழ்ப்பாணம், திங்கள்

இரு வருடங்களாகப் பழுதடைந்து நெடுந்தீவு மக்களுக்குப் பெரும் கஷ்டத்தைக் கொடுத்துவந்த அம்புலன்ஸ் மோட்டார் படகு விரைவில் பழுதுபார்க்கப்பட்டு சேவையிலீடுபடுத்தப் படவிருக்கிறது. இதுஅநேகமாக அடுத்த மாத ஆரம்பத்தில் சேவையிலீடுபடுமெனத் தெரிகிறது.

நெடுந்தீவு மக்கள் கஷ்டத்தை விளக்கி கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் இதுசம்பந்தமாக சுகாதார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. கு. பாலசிங்கத்துடன் தொடர்பு கொண்டிருந்தார்

நெடுந்தீவு மக்களின் பிரயாணத்துக்கு உதவிவந்து தற்போது பழுதடைந்தநிலையிலுள்ள 'அலையரசி'யும் இருவாரங்களில்பழுதுபார்க்கப்பட்டு சேவையிலீடுபடுத்தப்படுமெனத் தெரியவருகிறது.

---

## பாராட்டு

பருத்தித்துறை, ஞாயிறு

வடமாகாண விஞ்ஞான ஆசிரியர் சங்கத்தால் தற்போது க. பொ. த. (சாதாரண) இறுதி வகுப்புகளுக்கு நடாத்தப்பட்டுவரும் விஞ்ஞான பாடங்களுக்கான பரீட்சையின் தரம் இப்பகுதி விஞ்ஞான ஆசிரியர் பலரால் பாராட்டப்பட்டது

இப்பரீட்சையில் சித்தி பெறுபவர்கள் அரசாங்கப் பரீட்சையில் சித்திபெறுவது நிச்சயம் எனச் சில அதிபர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். இப்பரீட்சை இம்மாதம் 25-ம் திகதியுடன் முடிவடைகிறது.

---

## கொய்யாத்தோட்டத்தில் இருவர் காயமுற்றனர்

யாழ்ப்பாணம், திங்கள்

கொய்யாத்தோட்டம் புதிய வீதியின் பெயர் மாறியதைத்தொடர்ந்து ஏற்பட்ட சம்பவத்தில் சிலர் காயடைந்தனர். ஞானப்பிரகாசம், சந்திரசேகரம் ஆகிய இருவரும் காயங்களுடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொய்யாத்தோட்டம் புதிய வீதியில் வாழும் வரியிறுப்பாளர் இதுபற்றி மேயரிடமும் மேல் அதிகாரிகளிடமும் புகார் செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம், திங்.

'வடபகுதியில்உள்ள ஒரு தொகுதியிலிருந்து அடுத்த தேர்தலில், சிறுபான்மை தமிழர் ஒருவரை போட்டியில்லாமல் தெரிந்து அனுப்புவதற்கு, சகல அரசியல் கட்சிகளும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்' என்ற தீர்மானம் நேற்று யாழ்ப்பாணத்தில் நடந்த அகில இலங்கை சிறுபான்மை தமிழர் மகாசபையின் பொதுச் சபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மகாசபைத் தலைவர் திரு. எம். சி சுப்பிரமணியம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் சுமார் 125 அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர்.

செனட்சபையில் சிறுபான்மை தமிழர் ஒருவரை தெரிவு செய்ய சகல கட்சிகளும் ஒத்துழைக்கும் படி, தலைவர் வேண்டுகோள் விடுத்தார்.

தீண்டாமை ஒழிப்பு வாரத்தை 70-ம் ஆண்டு ஜனவரியில் முதல் இரண்டுவாரம் கொண்டாடுவதென்றும் கொடித்தினம் மூலம் நிதி சேர்ப்பதென்றும், கொழும்பிலும் இதே போல் தீண்டாமை ஒழிப்பு வாரமும், கொடித்தினமும் அனுஷ்டிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

---

## 30 வருட சேவை

பருத்தித்துறை, ஞாயிறு

30 ஆண்டுகள் வரையான ஆசிரிய சேவையிலிருந்து நெல்லியடி அரசடி அரசினர் பாடசாலை உதவி ஆசிரியர் திரு. எஸ். அந்தோனிப்பிள்ளை இம்மாத இறுதியுடன் ஓய்வுபெறுகிறார்.

திரு அந்தோனிப்பிள்ளை திருக்கோணமலை அர்ச். யோசப்கல்லூரி, அர்ச். சவேரியார் கல்லூரி, சம்பூர் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கடமையாற்றியுள்ளார்.

அரசடி அரசினர் பாடசாலைப் பெற்றார்-ஆசிரியர் சங்கம்அவருக்குஒரு பாராட்டுக்கூட்டம் நடாத்தவிருப்பதாகத்தெரிகிறது.

.........

## வறிய மாணவருக்கு இலவசமாக கிடைக்கும்

பச்சிலைப்பள்ளி, ஞாயிறு

கிளிநொச்சி வட்டாரப் பாடசாலைகளில் கல்வி பயிலும் வறிய மாணவர்களுக்கு இலவச புத்தகங்கள் வினியோகிக்கப்படவிருக்கின்றன. இதற்கான மாணவர்களின்விண்ணப்பத்தை உடன் அனுப்பி வைக்கும்படி கிளிநொச்சி வட்டாரக்கல்வி அதிகாரி சகல பாடசாலைத் தலைமை ஆசிரியர்களுக்கும் அறிவித்துள்ளார்.

## சாகித்திய மண்டலம் பாராட்டும்

1969-ம் ஆண்டுசாகித்திய மண்டலப் பரிசு பெற்ற எழுத்தாளர்களுக்கு அடுத்த மாதம் 1-ம்திகதி திங்கட்கிழமை காலை 9 மணியளவில் ஒரு பாராட்டுவிழா கொழும்பு தேஸ்ரன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதற்கான ஆயத்தங்களை ஸ்ரீ லங்கா சாகித்தியமண்டலம் செய்து வருகின்றது,

கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை ஜனாப் எம். எம் சரிபுதீன், நா. செல்லத்துரை யூலியர் இராசையா ஆகியோர் பாராட்டப்படவிருக்கும் தமிழ் எழுத்தாளர்களாவர்.

---

## கடன் இடைக்கவில்லை

பருத்தித்துறை, ஞாயிறு

1966-ம்ஆண்டுவீடுகட்டும் நோக்கத்துடன் அரசாங்க தேசிய வீடமைப்புத் திணைக்களத்திடம் கடன் பணம் கோரியவர்களுக்குஇதுவரை பணம் கிடைக்கவில்லையாம். வீட்டு நகல் படங்கள் பிரதியொன்று ரூபா 100 கொடுத்துப்பெற்று அத்திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டபோதிலும் இதுவரை எவருக்காவது பதில்கிடைக்கவில்லையெனத்தெரியவருகிறது.

உலக வங்கியின் ஆலோசனைப்படியே கடன் வழங்கும் வழக்கத்தைமேற்படி திணைக்களம்நிறுத்தியுள்ளதாக விடயம் தெரிந்த வட்டாரங்களிற் பேசப்படுகிறது.

## புதிய தபால் நிலையம்

சுழிபுரம், ஞாயிறு

பண்டத்தரிப்பு பட்டின சபை எல்லைக்கு உட்பட்ட பிராம்பற்றை என்னும் கிராமத்தில் ஓர் புதிய உபதபால் நிலையம் அடுத்த மாதம் முதலாம் திகதி திறக்கப்படவுள்ளது.

---

## யாருடையது

மோட்டார் சைக்கிள் லைசன்ஸ் ஒன்று செல்வன் வ. சண்முகராசா என்பவரால் கொட்டடி சீனிவாசகம் வீதியில்கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

## பாதிப்பு

நெடுந்தீவு, ஞாயிறு

கடந்த ஐந்து நாட்களாக ஓயாது பெய்த மழை வெள்ளப் பெருக்கை உண்டாக்கியுள்ளது. பலருடைய வீடுகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. மீனவர்கள் பலர் மீன் பிடிக்கச் செல்லவில்லை.

---

## சிறைத்தண்டனை

ஊர்காவற்றுறை, ஞாயிறு

சுண்ணாகம்- மயிலங்காடு வாசியான சின்னையா ஆறுமுகம் என்பவர் அவர் மனைவி இராசம்மாவுக்குஜிவனாம்சப் பணம் கட்டத்தவறிய குற்றத்திற்காக யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி ஜனாப். ஜமில் நான்குமாதம் சிறைத்தண்டனை விதித்துத்தீர்ப்பளித்தார்.

---

ஒகினுவா தீவு

## 1972-ல் கையளிக்கப்படும்

வாஷிங்டன், நவ. 23

ஒகினுவா தீவு ஜப்பானிடம் 1972-ம் ஆண்டு திரும்பக் கையளிக்கப்படுமெனஅமெரிக்கா அறிவித்துள்ளது. வெள்ளை மாளிகையிலிருந்து இந்த உத்தியோக பூர்வமான அறிக்கை வெளியிடப்பட்டது.

---

மட்டுவில் ஞாயிறு

சிறுபான்மைத் தமிழர் தேர்தல் சபை, வட இலங்கையில் பரவலாக எதிர்வரும் ஆட்சிமன்றப் பொதுத் தேர்தலுக்கான அபேட்சகர்களை நியமித்து, தேர்தலில் சிறுபான்மைத் தமிழர் சார்பில் போட்டியிடுவதற்கான சகல ஏற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளதாக, யாழ். சிறுபான்மைத் தமிழர் தேர்தல் சபைத் தலைவா திரு. எஸ். சுந்தரம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுவதாவது;-

வட இலங்கையில் இப்பொழுது பரவலாக அபேட்சகர்களை நிறுத்துவதாக, சிறுபான்மைத் தமிழர் தேர்தல் சபை முடிவு செய்தபோதிலும், இப்பொழுது சாவகச்சேரித் தொகுதிக்கும், கிளிநொச்சித் தொகுதிக்கும்மட்டுமே அபேட்சகர்களை நியமிக்கப்பட்டிருக்கிறது. ஏனைய தொகுதிகளுக்கான அபேட்சகர்களின் மனுக்கள் ஒன்றுக்கு மேற்பட்டு அதிகம் வரப்பெற்றிருப்பதால், அதில் மனுக்களை பரிசிலனை செய்வதில் சற்று காலதாமதம் இருந்தபோதிலும் விரைவில் அபேட்சகர் தேர்வு நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

காணி:

நல்ல தண்ணீர் வசதியுள்ள இரண்டு போகவிளைவு கொண்ட 10 ஏச்கர். காணியின் பெயர்: பஞ்சவனம். இடம்: 4-ம் வாய்க்கால், கரடிப்போக்கு, கிளிநொச்சி. விளம்பர இல. 1558, C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 1558

எமது நிலையத்தில் மாணவத் தாதிமரைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் 6—10 சத முத்திரைகள் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். நிர்வாகி, அறிவியல் கல்லூரி, பலாலி வீதி, திருநெல்வேலி. 1557


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### திங்கள் 24—11—69

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதம், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 தொழிலாளர்கேட்டவை, 1-00 திரைகானம், 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 வளரும்பயிர், 5-45 அஸான்.

இரவு 6-15 இசைப்பயிற்சி, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கர்னாடக இசை, 7-35 விளையாட்டு, 7-45 வாத்திய இசை, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-00 செய்திச்சுருள், 9-45 நாதஸ்வரம், 10-30 செய்திச்சுருக்கம், 10-33 திரைகானம், அதிகாலை 2-00 அப்பல்லோ வர்ணனை.


## கேள்வி விளம்பரம்

### கிளிநொச்சிப் பட்டண சபை, கிளிநொச்சி.

கிளிநொச்சி, பரந்தன் சந்தைகளில் ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி விற்பனை உரிமை- 1-1-1970 தொடக்கம் 31-12-1970 வரை

1-1-70-ந் திகதி தொடக்கம் 31-12-70-ந் திகதி வரை கிளிநொச்சிச் சந்தையிலுள்ள இரு ஆட்டிறைச்சிக் கடைகளிலும், இரு மாட்டிறைச்சிக் கடைகளிலும் பரந்தன் சந்தையிலுள்ள ஓர் ஆட்டிறைச்சிக் கடையிலும், ஒரு மாட்டிறைச்சிக் கடையிலும் இறைச்சி வியாபார உரிமைக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கிளிநொச்சிப் பட்டண சபைத் தலைவராகிய என்னால் 7-12-69-ம் திகதி காலை 9-00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

ஒவ்வொரு கேள்விப்பத்திரத்திற்கும் கேள்விப் பத்திரக் கட்டுப்பணமாக ரூபா 200/-ம் கேள்விப்பத்திரப்பணமாக ரூபா 10/-ம் செலுத்தியதன் பேரில் 5-12-69-ம் திகதி நண்பகல் 12-00 மணி வரை கிளிநொச்சிப் பட்டண சபை அலுவலகத்தில் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

இதற்குரிய சகல விபரங்களும் கிளிநொச்சிப் பட்டணசபையில் கந்தோர் நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

க. ச. கந்தையா.
தலைவர்,
பட்டணசபை,
கிளிநொச்சி

பட்டணசபை அலுவலகம்,
கிளிநொச்சி,
20-11-69 1832


## விடுதலை

ஊர்காவற்றுறை, ஞாயிறு

குருநகர் வாசியான சந்தியாகோ அந்தோனிப்பிள்ளை என்பவரை கொன்றதாகக் குற்றம் சாட்டி அவரது மகனை அந்தோனிப்பிள்ளை டொனஸ் என்பவர் மீது தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி எதிரியை விடுதலை செய்தார்.

விசாரணையின்போது மேல் கோர்ட்டிற்குப்பாரப்படுத்த சாட்சியம் போதாமை காரணமாகவே நீதிபதி எதிரியை விடுதலை செய்து தீர்பளித்தார்.


## விளம்பரம்

லொறிச் சாரதி ஒருவர் தேவைப்படுகின்றது. இலங்கைப்பிரசையும், பிரஜா உரிமை பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

வயது:- 30—45 உள்பட.

தகைமைகள்:- (1) லொறி ஓட்டுவதற்குத் தகைமையுள்ளவர்கள்.

(2) கல்வித் தராதரம் குறைந்தது 7-ம் வகுப்பு சித்தி பெற்றிருக்கவேண்டும்

(3) இயந்திரப் பழுது பார்க்கும் பயிற்சி உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

வேதனம்:- எல்லாப் படிகளும் உட்பட மாதம் ரூபா 210/-

பிணைப்பணம்:- ரொக்கப் பிணை: ரூபா 500/- ஆதனப் பிணை ரூபா 1,000/-.

ஏற்கனவே இப்பதவிக்கு மனுப்பண்ணினவர்கள் இந்த நிபந்தனைகளுக்கொப்பப் புதிதாக மனுப்பண்ணலாம்.

விண்ணப்பங்கள் 30-11-69க்குள் பதிவுத் தபாலில் காரியதரிசி, புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சமாசம், புலோலி கிழக்கு, பருத்தித்துறை என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும்.

ஆ. கந்தையா,
கௌரவ காரியதரிசி.
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை,
20-11-69. 1831


## மழையால் சேதம்

பருத்தித்துறை, ஞாயிறு

கடந்த சில நாட்களாகப் பெய்துவரும் மழை காரணமாக பருத்தித்துறைப்பகுதி மீனவர் நடுக்கடலில் மீன் பிடிப்பதைத் தவிர்க்க வேண்டி நேரிட்டது கரையோரங்களிலுள்ள சில வீடுகளின் ஓடுகள் தூக்கி வீசப்பட்டன. சில இடங்களில் சிறிய மண்ணரிப்பும் ஏற்பட்டுள்ளது.

வியாபாரிமூலைப் பகுதியில் வாழைகள், கத்தரி, தக்காளி உட்பட பல பயிர்கள் சேதமுற்றன. சிலபகுதிகளில் மின்சாரத்திலும் தடையேற்பட்டது, புன்னாலைக்கட்டுவன், ஊரெழுப் பகுதிகளிலுள்ள வாழைத் தோட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. பருத்தித்துறைப் பொதுச்சந்தையும், தாழ்ந்த பகுதிகளும் வெள்ளக்காடாகக் காட்சியளிக்கின்றன

தும்பளைப் பகுதியிலுள்ள சில வீதிகளில் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது


## வேண்டுமா?

இடைவெளிவிட்டு பிள்ளைகளைப் பெற வேண்டுமா? பிள்ளைப் பெறுவதைத் தடுக்க வேண்டுமா? மலடுநீங்கி பிள்ளை பெற வேண்டுமா?

விபரங்களுக்கு எழுதுங்கள்:

### குடும்பத் திட்டம்

457, காலி வீதி,
கொள்ளுப்பிட்டி.

(கடிதங்கள் ரகசியமாக வைக்கப்படும்)


### அரசாங்க அறிவித்தல்

1970 ஆண்டுக்குரிய துவக்கு முதலியவற்றின் உத்தரவுப் பத்திரம் புதுப்பித்தல்.

என் 205- யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள துவக்கு முதலியன 1969-ம் ஆண்டு டிசம்பர் மாதம் (மார்கழி) 1-ம் திகதி தொடக்கம் 1969-ம் ஆண்டு டிசம்பர் 31-ந் திகதி வரைக்கும் இம் மாவட்டத்திலுள்ள பிரிவுக் காரியாதிகாரிகளினால் அந்தந்தக் காரியாலயங்களில் புதுப்பிக்கப்படும். எல்லா மனுக்களும் காரியாதிகாரிகளுக்கு அனுப்பவேண்டும். துவக்குச் சொந்தக்காரர்கள் உத்தரவுப்பத்திரங்களை டிசம்பர் மாதத்தில் புதுப்பிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

1969-ம் ஆண்டு மார்கழி 31-ந் திகதியன்று அல்லது அதற்கு முன்பு துவக்கு உத்தரவுப் பத்திரங்களை புதுப்பிக்கத் தவறியவர்கள் உத்தரவுப் பத்திரக் கட்டண அளவு பணம் தண்டமாக இறுக்கவேண்டும். 1970-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் திகதிவரைக்கும் பிரிவுக்காரியாதிகாரிகளினால் உத்தரவுப் பத்திரம் தண்டம் அறவிடப்பட்டபின் புதுப்பிக்கப்படும் அதன் பின்னர் யாழ்ப்பாணக் கச்சேரியில் புதுப்பிக்கப்படும்.

யாழ். மாவட்ட
அரசாங்க அதிபர்.

கச்சேரி,
யாழ்ப்பாணம்,
13. நவம்பர் 1969.
G. P 361

## டபிள்டெக்கர் விபத்தில் பெண்

யாழ்ப்பாணம், திங்கள்

மரியன்பாபா என்ற 50 வயது ... யவயோதிபமாது 22-ம்


## திருமணம்

சந்திரன் — சாந்தா

கண்டி எஸ். கே. கம்பனி உரிமையாளர் திரு. வே. க. கந்தையா தம்பதிகளின் புத்திரன் செல்வன் இராமச்சந்திரனுக்கும், நீர்கொழும்பு (T. S. Y. O.) நெசவுத் தொழில் நுட்ப வல்லுநர் திரு. க. சிவரத்தினம் தம்பதிகளின் புத்திரி செல்வி சாந்தகுமாரிக்கும் எதிர்வரும் (26-11-69) புதன்கிழமை காலை 8-30 மணியளவில் திருமணம் நடைபெறும்.

இடம்: சாந்தி பவனம்
கொத்தாவத்தை,
பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.

1833


# சமய அறிவுப்போட்டி முடிவுகள்

சுழிபுரம், ஞாயிறு

பண்ணாகம் இந்துசமய விருத்திச் சங்கத்தினர் அண்மையில் நடத்திய சமய அறிவுப்போட்டிகளின் பெறுபேற்று விபரம்வருமாறு.

பச்சுப்போட்டி மேற்பிரிவு:

ஆ. விவேகானந்தன், ச. தனலட்சுமி, சு குணரத்தினம்,

மத்தியபிரிவு ஆண்:

ஆ இரகுப்பிள்ளை, தி அருணகிரிநாதன், பொ சிதம்பரநாதன்,

மேற்பிரிவு பெண்,

த கலாரஞ்சிதம் ஆ கலாவல்லி, பா பாலராணி.

கீழ்ப்பிரிவு:

ஆ வசந்தமலர், ஆ குணதேவி, ச பராசக்தி

எழுத்துப்போட்டி

மேற்பிரிவு;

சு குணரத்தினம், இ. கோகுலராசா, த தபேந்திராதேவி, கநடராசா,

மத்தியபிரிவு

தி மனோகராதேவி, நா. அருளானந்தம், ச. புண்ணியமூர்த்தி, இ அமிர்தலிங்கம்.

கீழ்ப்பிரிவு;

பா பாலராணி, சி புனிதவதி, ஆ கலாவல்லி, ச மகேந்திராதேவி.

கீழ்ப்பிரிவு-1

தி தனராணி, நா சத்தியேஸ்வரி, ஆ வசந்தமலர், செ. பொன்விழி.

திருமுறையோதுதல்

மேற்பிரிவு பெண்கள்:

ச தனலட்சுமி, சி பரமேஸ்வரி, சு செல்வமணி, த கலாரஞ்சிதம்.

ஆண்கள்:

ச புண்ணியமூர்த்தி, த முத்துலிங்கம், ஆ இரகுப்பிள்ளை, ஆ தயானந்தன்.

கீழ்ப்பிரிவு ஆண்கள்

ச தனபாலன்.

பெண்கள்:

செ. பொன்விழி, ச மகேந்திராதேவி, வி ரேவதி ஆ வசந்தமலர்.


வின்ஸர் (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

தென்னகத்திரைகளில் 100 நாட்களுக்குமேல் ஓடிய வெற்றிச்சித்திரம்

எதிர்நீச்சல்

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்

ஜெய்சங்கர்-விஜயகுமாரி முத்துராமன்-வாணிஸ்ரீ நடித்த

டீச்சரம்மா

இன்று முதல்

மாதர்கள் எல்லா வகுப்புகளுக்கும் அரைக் கட்டணத்துடன் அனுமதிக்கப்படுவர்.

ராணி (யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]

ஜெமினி - சரோஜாதேவி எஸ்.எஸ் ஆர்.-ராஜசுலோஜனு நடித்த

குலவிளக்கு

யாழ். வெலிங்டன்
மற்றும்
சில சினிமாஸ் திரைகளில்
இப்பொழுது திரையிடப்படுகிறது



பத்மஸ்ரீ ★ சிவாஜி கணேசன்
நாட்டியப் பேரொளி ★ பத்மினி
காதல் ராணி ★ கே. ஆர். விஜயா
ஹாஸ்ய மன்னன் ★ நாகேஷ்
★ மனோரமா ★ முத்துலக்ஷ்மி ★ வி. கே. ராமசாமி
மற்றும் பலர் திறம்பட நடித்த
கமலா பிக்சர்ஸ் அளிக்கும்

பாலாடை

டைரக்ஷன் ஏ. பீம்சிங்
பாடல் கண்ணதாசன்
இசையமைப்பு கே. வி. மகாதேவன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10-30 செய்திச்சுருக்கம், 10-33 திரைகானம், அதிகாலை 2-00 அப்பல்லோ வர்ணனை

...சாட்சியம் போதாமை காரணமாகவே நீதிபதி எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

...தும்பளைப் பகுதியிலுள்ள சில வீதிகளில் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது

13. நவம்பர் 1969.
G. P 361

## டபிள்டெக்கர் விபத்தில் பெண்

யாழ்ப்பாணம், திங்கள் மரியன்பாபா என்ற 50 வயதுடைய வயோதிபமாது 22ம் திகதி டபிள்டெக்கரில் மோதுண்டு பலத்த காயங்களுக்குள்ளானார். இவர் உடனடியாக யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

இ போ ச டபிள்டெக்கர் பஸ் யாழ்ப்பாணம் பஸ்நிலையத்துக்கு வந்துகொண்டிருந்தபோது முனீஸ்வரன் வீதியும் ஆஸ்பத்திரிவீதியும் சந்திக்கும் சந்தியிலேயே இந்த விபத்து ஏற்பட்டது.

இச்சம்பவம் பிற்பகல் 2-30 மணியளவில் நடைபெற்றது.

பொலிஸார் விசாரணை நடத்திவருகின்றனர்.

ஏ. பீம்சிங் கண்ணதாசன் கே. வி. மகாதேவன்


# இலவசம்

ஒவ்வோர்

# ஊஷா

## தையல் மெசினுடனும்

பிரயாணப் பெட்டியோ மின்சார இஸ்திரிக்கைப் பெட்டியோ இனும். ரொக்கக் கொள்வனவுக்கும் தவணைக் கொள்வனவுக்கும் பேதமின்றி வழங்கப்படும்.





விரையுங்கள்!

- டி லூக்ஸ்
- பிறைமா
- பிரின்செஸ்
- ஸ்ட்ரீம்லைன்ட்

ஆகிய நான்கு நிறுசுகளில் விரும்பிய மெசினைத் தேர்ந்தெடுங்கள்.

வெகுமதிகள் முடியும்வரை மட்டுமே இந்தச் சலுகை.



சிறந்ததை வாங்குங்கள்; ஊஷா எல்லாவற்றிலும் சிறந்தது



**வெஸ்லி சினிமா**
மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
ரவிச்சந்திரன் - காஞ்சனா
நடித்த
**அதே கண்கள்**

வல்வெட்டித்துறை
**றஞ்சனா தியேட்டர்**
தினசரி 2-30 6-30, 9-30.
சுந்தரராஜன். - பத்மினி
பேபிராணி
நடித்த
**குழந்தைக்காக**

**ஸ்ரீ காலிங்கா**
இணுவில்
தினசரி, 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
நாகேஷ்—கல்பனா
நடித்த
**சாதுமிரண்டால்**

**REGAL JAFFNA**
Daily 4-45, 7, & 9-45 p.m
Dean Martin,
Stella Stevens
in
THE SILENCERS
(Adults)

**MANOHARA**
Daily 3 shows,
Poya days 10-30 a m
DEATH IS A WOMAN
The all British
SPY THRILLER
Exciting Entertainment
For Action Fans!!
(Spy Film)
(Color- Adults Only)





# புத்திசாலி இவர்..

கிடுகுகளால் வேயப்பட்ட தமது வேலிகளை

## றிவர் பிராண்ட்

கல்வனைஸ்ட் தகடுகளால் மாற்றியமைத்து விட்டார்.

CGI-14-69 MASTERS

இதனால் பணம் மிஞ்சுகிறது, நீடிய காலம் நிலைக்கிறது, பொருத்த இலகுவாகிறது, கூலிச்செலவைக் குறைக்கிறது

நீங்களும்

வேய்தல், அடைத்தல் மற்றும் வேலிகளுக்கு

## றிவர் பிராண்ட்

கல்வனைஸ்ட் தகடுகளையே உபயோகிக்க ஆரம்பியுங்கள்.

உங்களுக்கு அண்மையிலுள்ள இரும்புப் பொருள் வியாபாரியைக் காணுங்கள்.

இலங்கை கல்வனைசிங் இன்டஸ்ட்றீஸ் லிமிட்டெட்
450, பழைய சோனகத் தெரு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிஜலிங்கப்பா உத்தரவை சி. எஸ் ரத்து செய்தார்



## இடைக்கால தலைவரானபின் முதல் நடவடிக்கை

புதுடில்லி, நவ. 23

**அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் இடைக்கால தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் திரு. சி. சுப்பிரமணியம் கடந்த இரவு அதிமுக்கியமான ஒரு நடவடிக்கையை எடுத்தார். திரு. நிஜலிங்கப்பா ஏற்கனவே எடுத்த ஒரு நடவடிக்கையை ரத்துசெய்து புதியஉத்தரவொன்றை திரு. சுப்பிரமணியம் விடுத்திருக்கிறார்.**

**மாநிலங்களில் திருமதி இந்திராகாந்தியின் செல்வாக்கைப் பெருக்கவும் அவர் கையை ஓங்கச் செய்யவும் திரு. சுப்பிரமணியத்தின் இந்த நடவடிக்கைகளின் நோக்கம் என்று கருதப்படுகின்றது.**

உத்தர பிரதேசக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. கமலபத்தி, திரு பாட்டியையும், பொதுக் காரியதரிசிதிரு. பகுகுணவையும் அவர்களின் பதவிகளிலிருந்து திரு. நிஜலிங்கப்பா விலக்கியிருந்தார். அவர்களுக்குப் பதிலாக திரு. மோகன்லால் கோதம் என்பவர் உத்தர பிரதேசக் காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார்.

திரு. சுப்பிரமணியம் கடந்த இரவு அவசரமாக உத்தரபிரதேச காங்கிரஸ் கமிட்டிப் பிரமுகர்களுக்கு அனுப்பிய அவசரச் செய்தியில், திரு. மோகன்லால் கோதம் தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டிருப்பதாகவும், திரு. திருபாத்தியும், பகுகுணவும் தங்கள் பதவிகளில் தொடர்ந்து இருப்பதாகவும் அறிவித்திருக்கிறார்.

இந்த உத்தரவுகளை உத்தர பிரதேசக் காங்கிரஸ் கமிட்டியினர் எங்ஙனம் ஏற்றுக் கொள்ளப்போகிறார்கள் என்று தெரியவில்லை.

நேற்று கூடிய அகில இந்திய காங்கிரஸ் மகாசபைக் கமிட்டி திரு. சி.சுப்பிரமணியத்தை இடைக்காலத் தலைவராக நியமித்தது. கமிட்டி நிறைவேற்றிய ஒரு தீர்மானத்தின் மூலம் திரு. நிஜலிங்கப்பா காங்கிரஸ் தலை...

...டியினரின் அழைப்பின் பேரில் அகில பாரத காங்கிரஸ் கமிட்டி அங்கத்தவர்கள் கலந்துகொண்டார்கள். கூட்டத்தில் 440 பேர் கலந்துகொண்டதாக அறிவிக்கப்பட்டது. 65 பேர்வருவதற்கு வசதியின்மையால் ஆதரவு தெரிவித்து செய்திகள் அனுப்பியிருந்தார்கள். அகில பாரத காங்கிரஸ் கமிட்டியில் மொத்தம் 705 உறுப்பினர்கள் இருக்கிறார்கள் கூட்டத்துக்கு திருமதி இந்திராகாந்தி தலைமை வகித்தார். கூட்டம் இன்னும் தொடர்ந்துநடைபெற விருந்தது

### காரியக்கமிட்டி

புதிதாக ஒரு காரியக் கமிட்டியைத் தெரிவு செய்வது என்றும் நேற்று கூடிய அகில பாரத காங்கிரஸ் கமிட்டி முடிவுசெய்தது. இந்தக் கமிட்டி 10 அங்கத்தவர் திரு. சுப்பிரமணியத்தினால் நியமனம் செய்யப்படுவார்கள். மற்றவர்கள் நிரந்தர உறுப்பினர்கள். திரு. சுப்பிரமணியம் தற்காலிக தலைவராக இருப்பதால் அடுத்த மாதம் மீண்டும் கூடி புதிய தலைவர் ஒருவரைத் தெரிவுசெய்வது என்றும் கூட்டம்முடிவுசெய்திருக்கின்றது.

### ஒருவர் எதிர்த்தார்

திரு. நிஜலிங்கப்பாவைத் தலைவர் பதவியிலிருந்து ... மட்டும் எதிர்த்தார். 705 பேரில் 440 பேர் வந்திருந்ததாக காங்கிரஸ் ஆட்சிமன்றக் கட்சியில் பிரதம கொறடா திரு. ரகுராமையா கூறினார்.

### சின்டிகேட் ஆட்சேபம்

திருமதி காந்தியின் ஆதரவாளர்கள் நடத்திய அகில பாரத காங்கிரஸ் கமிட்டி மாநாட்டுக்கு 440 பேர் வந்திருந்தார்கள் என்றகூற்றை சின்டிகேட் ஆதரவாளர்களை பத்துப்பேர் விடுத்த ஓர் அறிக்கையில் ஆட்சேபித்திருக்கிறார்கள்.

### லோகசபை உபசபாநாயகர்

லோக்சபையின் உபசபாநாயகர் பதவிக்கு தி. மு. க. தலைவர் திரு. மனோகரனின் பெயர் புதுடில்லியில்அடிபடுகின்றது. ஆனல் திரு. மனோகரன் தமக்கு இதில் அக்கறையில்லையென்று கூறியிருக்கிறார்.

தி மு. க. வுக்கு லோக்சபை உபசபாநாயகர் பதவியை தி. மு க. வுக்கு வழங்க இந்திரா கோஷ்டியினர் முன்வந்திருப்பதாக கூறப்படுவதை திரு கருணாநிதி சென்னையில் மறுத்தார்.

லோக்சபை உபசபாநாயகராகவிருந்த திரு. காடில்கார் சமீபத்தில் பதவியை ராஜினமா செய்ததைத் தொடர்ந்து அந்தப் பதவி காலியாக இருந்துவருகின் ...

### டி. டி. கே. எச்சரிக்கை

புதுடில்லி, நவ. 23

'காங்கிரஸ் கட்சியில் தற்போது ஏற்பட்டு இருக்கும் பிளவு இரண்டு தரப்புக்குமே நல்லதல்ல. இதனல் கட்சி அடியோடு அழிந்துவிடும் நிலைதான் ஏற்படும்'

சமீபத்தில் நடந்த சின்டிக்கேட், இந்திரா பலப்பரீட்சையில் நடுநிலைமை வகித்தவரான டில்லிபழைய நிதியமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் மேற்கண்டவாறு காமராஜரிடம் எச்சரிக்கை செய்துள்ளார்.

இந்திராவின் அழைப்பின் பேரில் டில்லி சென்றுள்ள டி. டி. கே. இந்திராகாந்தியையும் சின்டிக்கேட்டைச் சேர்ந்த காமராஜரையும் சந்தித்துப் பேசினர்.

தனது டில்லிவருகைபற்றி பத்திரிகை நிருபர்களுக்குப் பதிலளிக்கையில் டி. டி. கே. காங்கிரஸ் இருபிரிவினருக்குமிடையில் சமரசம் செய்து வைக்கத்தான் வந்திருப்பதாகக் கூறப்படுவது தவறு எனவும் தனது வருகையின் முக்கிய நோக்கம் பொருளாதார பிரச்சினைகளில் பிரதமருக்கு ஆலோசனைகள் கூறுவதே எனவும் தெரிவித்ததோடு காங்கிரஸ் கட்சியின் தற்போதைய நிலையும் நடந்துவிட்ட சம்பவங்களும் தனக்கு அதிர்ச்சியைத் தந்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

0 0 0

### "இந்திராவின் துணிச்சலுக்கு ஆதரவு"

'ஏகாதிபத்தியத்தின் கைக்கூலிகளும், முதலாளிகளின் பிரதிநிதிகளுமான சின்டிக்கேட் பெருச்சாளிகளை எதிர்க்கும் துணிச்சல் பிரதமர் திருமதி இந்திராகாந்திக்குத்தானிருக்கிறது ...



### பெரியார் போராட்டம்

### கருணாநிதி விளக்கம்

திருச்சி, நவ. 23

''கோவிலில் கடவுள்கள் சிலை அருகில்வரை ஜாதி வேற்றுமையின்றி யாரும் போகலாம் அப்படி போவதில் எந்தவித ஆட்சேபனையும் இருப்பதாக நான் நினைக்கவில்லை. ஆனல் மூலஸ்தானத்தில் கோவில்களின் விலையுயர்ந்த பொருட்கள் இருக்கின்றன இதனல் அதைக் காப்பாற்றவேண்டிய பொறுப்பு ஒரு சாராருக்குத்தான் இருக்கவேண்டுமா என்பது பற்றி எல்லோரும்கூடி ஒரு முடிவு எடுக்கவேண்டும்''

ஈ. வெ. ரா. பெரியாரின் 'கர்ப்பக் கிரகத்தினுள் நுழையும் போராட்டம்' பற்றி நிருபர்கள் இங்கு வந்த முதலமைச்சர் கருணாநிதியிடம் கேட்டகேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் போராட்ட விஷயமாக நிருபர்களுக்குப் பதிலளிக்கையில், 'கிளர்ச்சிகளைத்தடுக்க என்னல் ஆன முயற்சிகளைச் செய்வேன். சாமி சிலையை எல்லோரும் தொடலாம். இக்கருத்தைப் பெரியார் மட்டுமல்ல சங்கராச்சாரியார் கூட ஒப்புக்கொண்டிருக்கிறார் எனத் தெரிவித்தார்.

### சைக்கிளில் 88 நாடுகளை சுற்றிவந்தார்

சென்னை, நவ. 23

...ரேம் பகதூர் சேர்த்தி என்ற இளைஞர் உலகில் 88 ...

### 'நன்றிக்குப் பெயர்'

மட்டுவில், ஞாயிறு

'என்னன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் செய்நன்றி கொன்ற மகர்க்கு உய்வேஇல்லையென்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வள்ளுவர் வரையறுத்துக் கூறியிருக்கிறார். இதை கருத்தில்கொண்டு எத்தனையோ பரம்பரையினருக்குத் தொடர்ந்து வித்தியாதானம் செய்து வந்துள்ள பெருமைக்கு ஆளாகியுள்ள திரு சின்னத்தம்பி கந்தரின் பெயரை இப்பாடசாலைக்கு கொடுப்பதுதான் நாம் அவருக்கு செய்யக்கூடிய கைமாறாகும்.'

இவ்வாறு மட்டுவில் மகா வித்தியாலய பெயர் மாற்றம் சம்பந்தமான கூட்டமொன்றில் பேசிய மட்டுவில் மகா வித்தியாலய பெற்றோர் ஆசிரிய சங்கச் செயலாளர். திரு சடையர் சுந்தரம் தனது உரையின் போது கூறினர்.

அதிபர் திரு கெங்காதரம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு ஆறுமுகம், திரு எஸ். எம். அருளம்பலம் உட்பட பலர் உரை நிகழ்த்தினர். பாடசாலைப் பெயர் மாற்றுவதற்கான பிரேரணை கல்வி அதிபருக்கு அனுப்புவதாக முடிவு செய்யப்பட்டது.

### மாணவருக்கு பாராட்டு

துணுக்காய், ஞாயிறு

மல்லாவி அரசினர் பாடசாலைமாணவர்கள் அண்மையில் ஐந்து பாடசாலை நாட்களிலும் மல்லாவி வயல் வெளியிலே களைபிடுங்கினர். முதல் நாள் நிகழ்ச்சியை யோகபுரம் கிராமசேவையாளர் திரு. ஆ. மார்க்கண்டுவும் இரண்டாம்நாள் நிகழ்ச்சியை விவசாய விசாலிப்புச் சேவையாளர் திரு. மு. இலட்சுமணப் பெருமாளும் ஆரம்பித்து வைத்தனர்.

ஐந்து நாட்களிலும் மூவருக்குச் சொந்தமான 12 ஏக்கர் நிலத்திற் களைபிடுங்கப்பட்டது. இதில் மாணவர் காட்டிய திறமையைக்கண்டு வயற் சொந்தக்காரரும் மற்றையோரும் அவர்களைப் பாராட்டினர்.

மாணவர்களுக்கு வயற் சொந்தக் காரர்களால் சிற் ...

### சேதமும் அச்சமும்

புலோலி, ஞாயிறு

குடந்தனை அம்பன், நாகர்கோவில் பகுதிகளில் கடந்த நான்கு நாட்களாக தொடர்ந்து இடைவிடாது பெய்யும் மழையினல் பெருவெள்ளம் ஏற்படக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது. பள்ளப்பகுதிகளில் குடியிருக்கும் வீடுகளெல்லாம் வெள்ளக்காடாக காட்சியளிக்கிறது. இதனல் மக்கள் பெரும் பீதியடைந்துள்ளனர்.

வயல்கள் எல்லாம் குளம் போல் காட்சியளிக்கின்றன. இதனல் இம்முறை விவசாயிகள் நம்பி இருந்த வருமானம் கிடைக்காது போய் விடுமோ எனக் கவலையடைந்துள்ளனர்.

குளங்கள் உடைத்து வீதியை மேவி தண்ணீர் பாய்வதால் பருத்தித்துறை மருதங்கேணி பஸ் சேவை சரிவர நடைபெறாது ஸ்தம்பித்துள்ளது. இதனல் பள்ளிக்கூட மாணவிகளும், அரசாங்க உத்தியோகத்தர்களும் பெரும் கஷ்டமடைந்துள்ளனர். நாகர்கோவில் பகுதியிலுள்ள தந்திக்கம்பிகளும் சரியாக இயங்கவில்லை. மரங்களும் தந்திக்கம்பிக்கு மேல் சரிந்து விழுந்திருக்கின்றன. தொடர்ந்து இப் பகுதியில் மழைபெய்யுமானல் பள்ளப்பகுதியில் குடியிருப்போர் வேறு இடங்களுக்கு நகரவேண்டிய நிலை ஏற்படும்.

### பருத்தித்துறை நகரசபை தேர்தல்

புலோலி, ஞாயிறு

பருத்தித்துறை நகரசபை தேர்தல் இம்மாதம் 30ம் திகதி நடைபெறவிருக்கின்றது. ஒன்பது வட்டாரங்களில் நடைபெற விருக்கும் தேர்தலில் எட்டுவட்டாரங்களில் மாத்திரமே தேர்தல் நடைபெற விருக்கின்றது. ஒரு வட்டாரத்தில் போட்டியின்றி தெரிவு நடை பெற்றது தெரிந்ததே.

இம்முறை இத்தேர்தலில் எல்லா வட்டாரங்களிலும் பலத்த போட்டிகள் ஏற்பட்டுள்ளன.

### மெழுகு வர்த்தி வெளிச்சத்திலே...

பருத்தித்துறை, ஞாயிறு

கடந்த சில நாட்களாகப் பெய்து வரும் மழைகாரணமாக அதிபர் ஒருவரால் க. பொ. த (சாதாரண) இறுதிப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவருக்கு மெழுகுவர்த்தி வெளிச்சத்திற் கல்விபோதிக்கப்பட்டது. வதிரிதிரு இருதயக்கல்லூரியிலேயே இச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

## இன்றைய பலன்

**சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை**

கார்த்திகை மாதம் 9-ம் திகதி (24-11-69

**மேஷம்**- எண்ணங்கள் ஆயிரம் சிந்தனையிலே வந்து உந்தும். ஏமாற்றம் தாக்கும், விந்தையான போக்கு வேடிக்கைகாட்டும்.

**ரிஷிபம்**- கண்களில் கனல் தெறிக்கும் கருத்தினல் கர்வம் தோன்றும் கொள்கையில் கோணலாலே குன்றிடும் புகழும் தானே

**மிதுனம்**- திடீர் திருப்பம் வாழ்ககையை வழப்படுத்தும். சிலர் வாழ்க்கை அதிஷ்டகரமாக அமையும்.

**கடகம்**- நினைத்தது நடக்காது. நின்மதிபறக்கும். நெடும் பயணம் வேண்டாம். பொருள் தவறக்கூடும். அதிக சிந்தனையைத் தவிர்.

**சிம்மம்**- வாகன விருத்தியுடன் இல்லத்தில் திருப்தி காணும் மோகன வாழ்வு கிட்டும். முன்னேற்ற வழியும் தோன்றும்.

**கன்னி**- கனிவான பேச்சு, காந்தம் போல் பார்வை. கன்னியர் உறவு காதலுக்கும் இடமுண்டு கவர்ச்சிகரமான நாள்.

**துலாம்**- தவறுகள் நடக்கலாம் நிலையும் தடுமாறும். நண்பர்களே காலை வாரிவிடக் கூடும். சிலருக்கு அன்னிய வாசம் ஏற்படலாம்.

**விருச்சிகம்**- இன்பத்தின் அணைப்பு இன்று தாராளமாகக் கிடைக்கும். காதலர்கள் வாழ்க்கையில் தடைகள் விலகும். பெற்றோர் ஆதரவும் உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**தனுசு**- விஷப் பரீட்சையின் மூலம் விபரீதங்கள் விளையும் மயக்கும் மொழிகளால் பணத்தை இளக்க நேரிடலாம். இன்று சும்மா இருப்பதே சுகம்.

**மகரம்**- இலட்சியப் பாதையில் வெற்றி நடை ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று தெரியவில்லை.

நேற்று கூடிய அகில இந்திய காங்கிரஸ் மகாசபைக் கமிட்டி திரு. சி. சுப்பிரமணியத்தை இடைக்காலத் தலைவராக நியமித்தது கமிட்டி நிறைவேற்றிய ஒரு தீர்மானத்தின் மூலம் திரு. நிஜலிங்கப்பா காங்கிரஸ் தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். இந்தக்கூட்டத்தில் திருமதி இந்திரா கோஷ் தற்காலிக தலைவராக இருப்பதால் அடுத்த மாதம் மீண்டும் கூடி புதிய தலைவர் ஒருவரைத் தெரிவுசெய்வது என்றும் கூட்டம்முடிவுசெய்திருக்கின்றது.

### ஒருவர் எதிர்த்தார்

திரு. நிஜலிங்கப்பாவைத் தலைவர் பதவியிலிருந்து விலக்கும் தீர்மானத்தை கூட்டத்துக்கு வந்திருந்த அங்கத்தவர்களில் ஒருவர் ... யினர் முன்வந்திருப்பதாக கூறப்படுவதை திரு கருணாநிதி சென்னையில் மறுத்தார்.

லோக்சபை உபசபாநாயராகவிருந்த திரு. காடில்கார் சமீபத்தில் பதவியை ராஜினுமா செய்ததைத் தொடர்ந்து அந்தப் பதவி காலியாக இருந்துவருகின்றது.

# பூமிக்குத்திரும்பும் பாதையை அப்பல்லோ-வீரர் சரிசெய்தனர்

## ஒரு நிமிடம் பிந்தியே பூமியில் இறங்குவர்

ஹூஸ்டன், நவ. 23

அப்பல்லோ-12 வீரர்கள் இன்று பூமியின் ஈர்ப்பு விசைக்குள் பிரவேசித்துவிட்டதாகவும் படிப்படியாக அவர்களின் கலம் வேகம் பெற்றுவருவதாகவும் அறிவிக்கப்பட்டது.

அப்பல்லோ-12 வீரர்கள் செவ்வாய்க்கிழமை இரவு பசுபிக் சமுத்திரத்தில் வந்திறங்கவிருக்கிறார்கள்.

பூமிக்குத் திரும்புவதற்கு முன்பதாக அவர்கள் கடைசியாகத் தொலைக்காட்சியொன்றைப்பூமிக்குஅனுப்புவார்கள்.

நேற்றுப் பூமியுடன் தொடர்புகொண்ட அவர்கள் ஹூஸ்டனிலுள்ள விஞ்ஞானிகளுடன் தமது சந்திர ஆராய்ச்சி பற்றி ஆலோசனைகள் நடத்தினர்.

சந்திரத்தரையில் ரங்கள் பாவித்த கருவிகளின் மாதிரியை அடுத்த பிரயாணங்களின் போது மாற்றி அமைக்கவேண்டுமென்று அவர்கள் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

தாங்கள் பாவித்த கருவிகளில் சில பொருத்தமில்லாமல் இருந்ததாகவும், சந்திரனில் பாரம் குறைவாக இருந்தபோதிலும் கருவிகள் சில உடைந்துபோனதாகவும் அவர்கள் தெரிவித்தனர்

பூமியில்போலவே அங்கும் கற்களை மேலே எறிந்தால் கீழே வந்து விழுவதாகவும் அப்பல்லோ வீரர்கள் தெரிவித்தனர். சந்திரப் பாறைகளின் நிறங்களையும் அவர்கள் வர்ணித்தனர்.

இனிமேல் விண்வெளிக் கலங்கள் செலுத்தப்படும் போது வெட்பதட்பநிலை அப்பல்லோ-12 அனுப்பப்பட்டசமயத்தில் போல் இருந்தால் அவைகளை ஒத்திப் போடுவதென்று விஞ்ஞானிகள் முடிவுசெய்திருக்கின்றனர். அப்பல்லோ-12 அனுப்பப்பட்டபோது இரு மின்னல் தாக்கங்கள் ஏற்பட்டதாகவும், அவை கீழே இருந்து கலத்துடனேயே மேலே கிளம்பிய வாயுக்களினுல் ஏற்பட்டிருக்கலாம் என்றும் அவர்கள் கூறினர்.

அப்பல்லோ-12 வீரர்களான சார்ல்ஸ் கொன்ருட் அலன் பீன், றிச்சார்ட் கோர்டன் ஆகிய மூவரும் தமது கலத்தின்பாறையைச் சரி செய்வதற்காக ஒரு சிறு ரொக்கட்டை வெடிக்கச் செய்தனர். இதனுல் பூமியில் இறக்குவது ஒருநிமிடம் தாமதமாகலாம் என்று கூறப்படுகின்றது.

சந்திரனில்அப்பல்லோ-12 வீரர்கள் கொன்ருடும் பீனும் சுலபத்தில் களைப்படையவில்லையென்று அறிவித்தால். இனிமேல் சந்திரனில் இறங்குகிறவர்களை 5 மணி நேரம் வரை அங்கு நடமாட அனுமதிப்பது பற்றி விஞ்ஞானிகள் ஆலோசிக்கின்றனர்.

அப்பல்லோ-11 வீரர்களை போலவே அப்பல்லோ-12 வீரர்களும் 21 நாட்கள் தனித்து இருக்கவேண்டியிருக்கவேண்டும். சந்திரனில் இறங்கி ஆராய்ச்சிகள் நடத்தியபின் மீண்டும் தாய்க்கப்பலில் கொன்ருடும் பீனும் ஏறிக்கொண்டதிலிருந்து இந்த 21 நாள் ஆரம்பமாகின்றது.

---

## லொறிச்சாரதிக்கு சிறை

ஊர்காவற்றுறை, ஞாயிறு

மல்லாகம் நீதிமன்ற வீதியைச்சேர்ந்த சிவசம்பு கந்தசாமி என்பவர் தனது லொறியை அதிவேகமாகவும், கவனயீனமாகவும்செலுத்திநாவாந்துறையைச்சேர்ந்த கதிரவேலு யோகராசாவிற்கு மரணம்விளைவித்தகுற்றத்திற்கு மாவட்ட நீதிபதி ஜனுப். ஐ. எம். இஸ்மெயில்பதினெட்டு மாதம் சிறைத்தண்டனை விதித்தார்.

---

## 29-ம் திகதி விசாரணை

யாழ்ப்பாணம், திங்கள்

ஐக்கிய தேசியக் கட்சியின் கீழ் இயங்கும் ஐ தி க சேவக சங்க வட இலங்கைக்கிளையின் காரியதரிசியான திரு. க. சோமசுந்தரம் வேலைநீக்கம் செய்யப்பட்டது சம்பந்தமாக வட இலங்கையிலுள்ள பிரபல வர்த்தக ஸ்தாபனம் ஒன்றுக்கெதிராகத் தொடரப்பட்ட வழக்கு இம்மாதம் 29-ம் திகதி யாழ்ப்பாணம் தொழிற்கோர்ட்டில்விசாரணைக்கெடுக்கப்படவிருக்கிறது.

மேற்படி பிரச்னை பற்றி யாழ்ப்பாணம் தொழிற்கந்தோரில் குறிப்பிட்ட சங்கத்தாருக்கும் வர்த்தகஸ்தாபன முகாமையாளருக்கும் இடையில் முன்னர் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் பயனளிக்கவில்லை.

---

## சைவ மாகசபை ஆண்டு விழா

ஊர்காவற்றுறை, ஞாயிறு

நாரந்தனை சைவமகாசபையின் 15-வது ஆண்டுவிழா நாரந்தனை தான்தோன்றி அம்பாள் ஆலயமண்டபத்தில் நடைபெற்றது. சபைத் தலைவர் திரு. நா. நடராசா விழாவிற்குத்தலைமை வகித்தார்.

ஆண்டு அறிக்கைகள் அங்கீகரிக்கப்பட்டமையைத் தொடர்ந்து பின்வருபவர்கள் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. நா. நடராசா உபதலைவர்: திரு. அ. செல்லப்பா, காரியதரிசி: திரு. செ. இராசதுரை, உபகாரியதரிசி: திரு. க. இலங்கநாதன், தனுதிகாரி; திரு. செ. விசுவலிங்கம். நிர்வாகசபை ஒன்றும் அமைக்கப்பட்டது.

---

## ... ஆதரவு"

'ஏகாதிபத்தியத்தின் கைக்கூலிகளும், முதலாளிகளின் பிரதிநிதிகளுமான சின்டிக்கேட் பெருச்சாளிகளை எதிர்க்கும் துணிச்சல் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்குத்தானிருக்கிறது அதனுல்தான் நாங்கள் நிபந்தனைக்குட்பட்டு ஆதரவு அளிக்கின்ருேம்'

முஸ்லிம் நாடுகள் மாநாட்டில் இந்தியா கலந்துகொண்டதற்குக் கண்டனம் தெரிவிக்கும் தீர்மானத்தை ஆட்சிமன்றத்தில் சுதந்திரக் கட்சி கொண்டுவந்தபோது அத்தீர்மானத்தின் மீது பேசுகையில் தி மு க உறுப்பினர் திரு மனேகரன் மேற்கண்டவாறு கூறினுர்

திரு மனேகரன் பேசும்போது எதிர்க்கட்சி வரிசையிலிருந்து கூச்சல் எழுந்து கொண்டிருந்தது

---

## கென்யாட்டா மீண்டும் அதிபர்

நைரோபி, நவ. 23

கென்யாவின் அதிபராக மீண்டும் திரு. ஜோமோ கென்யாட்டா எதிர்ப்பின்றி தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார். 1964-ம் ஆண்டு கென்யா சுதந்திரம்பெற்றதிலிருந்து திரு. கென்யாட்டா அதிபராக இருந்து வந்துள்ளார்.

அடுத்த மாதம்நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தல் அமைதியாக நடைபெற உதவும்படி திரு. கென்யாட்டா பொதுமக்களைக் கேட்டுக்கொண்டார்.

---

## வரிப்பாக்கியை கட்டிவிட்டார்

புதுடில்லி, நவ. 21

மத்திய அரசாங்க உணவு அமைச்சர் திரு. ஜகஜீவன் ராம் வருமானவரிப்பாக்கி ரூபா முப்பதாயிரத்தையும் கட்டிவிட்டதாக டெல்லி மேல் சபையில் அறிவிக்கப்பட்டது.

ஜகஜீவன்ராமின்வருமான வரிப்பாக்கிபற்றி மேல்சபையில்கேளவிக்கணைகள தொடுக்கப்பட்டன "பத்து ஆண்டுகளுக்குமேலாக ஜகஜீவன் ராம் கட்டவேண்டிய வருமானவரிப்பாக்கி 30 ஆயிரத்து 593 ரூபாவாகும் வட்டியுடன் சேர்த்து அவர்முழுப் பணத்தையும் கட்டிவிட்டார் வரிப்பணம் கட்டாதது பற்றி அவர் மீது நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டது என்று கேனவிகளுக்குப் பதிலளித்த நிதி இலாகா ராஜாங்க மந்திரி பி. சி. சேத்தி கூறினுர்.

---

## சைக்கிளில் 88 நாடுகளை சுற்றிவந்தார்

சென்னை, நவ. 23

பிரேம் பகதூர் சேர்த்தி என்ற இளைஞர் உலகில் 88 நாடுகளைச் சைக்கிளிலேயே சுற்றி அரியதொரு சாதனையை நிலைநாட்டியுள்ளார்

தற்போது சென்னைக்குவந்திருக்கும் இச்சைக்கிள் வீரர் நேபாளத்திலுள்ள காட்மாண்டுநகரைச் சேர்ந்தவர்.

1956-ம் ஆண்டு இவ்வீரர் தமது வீட்டில் இருந்து உலகம் சுற்றுவதற்காக ஒரு சைக்கிளில் புறப்பட்டு முதலில் இந்தியா முழுவதும் சுற்றுப்பயணம் செய்து பின் பாகிஸ்தான், சிரியா, அரேபியா, ஜோர்டான், சவுதி அரேபியா, இங்கிலாந்து, அமெரிக்கா, ஜெர்மன், யூகோஸ்லாவியா, ரஷ்யா, மலேஷியா, சிங்கப்பூர், ஜப்பான், இந்தோனேசியா, ஆஸ்திரேலியா, முதலிய நாடுகளைச் சுற்றிவந்துள்ள இவ்வீரர் தற்போது 88 நாடுகளைச் சுற்றியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## நடுநிலைமை வகிக்க முடிவு

பம்பாய், நவ. 23

பம்பாய் பிரதேச காங்கிரஸ் குழு எக் கோஷ்டியிலும் சேராமல் நடுநிலைமை வகிப்பது எனவும் கட்சியில் ஒற்றுமை நிலவ வேண்டுமெனவும் வற்புறுத்தி ஒரு தீர்மானமொன்றை பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றியுள்ளது.

காங்கிரஸ் நெருக்கடி பற்றி விவாதிப்பதற்காகபம்பாய் பிரதேச காங்கிரஸ் தலைவர் ஏ, கே. ஹபீஸ்கா தலைமையில் கூடிய கூட்டத்தில் மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இரு கோஷ்டிகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்த சகல முயற்சிகளையும் செய்ய வேண்டுமென எஸ். கே. பாட்டீலே மேற்படி தீர்மானம் கேட்டுக்கொண்டது.

இத் தீர்மானத்தின்மீது பேசிய பாட்டீல் தீர்மானத்தின் வேண்டுகோளுக்குச் சாதகமாகப்பதிலளித்துள்ளதாகத் தெரிகிறது.

## 'நாவலர் விழா'

சுழிபுரம், ஞாயிறு

வழக்கம்பரை சன சமூக நிலையத்தினர் அடுத்த வெள்ளிக்கிழமை மாலை வழக்கம்பரை அம்மன் கோவில் மண்டபத்தில் நாவலர் விழாவை சிறப்பாகக்கொண்டாட ஏற்பாடுகள் செய்துள்ளனர். கூட்டுப்பிரார்த்தனை, சொற்பொழிவுகள் ஆகியன நடைபெறும்.

---

... குச் சொந்தமான 12 ஏக்கர் நிலத்திற் களைபிடுங்கப்பட்டது. இதில் மாணவர் காட்டிய திறமையைக்கண்டு வயற் சொந்தக்காரரும் மற்றையோரும் அவர்களைப் பாராட்டினர்.

மாணவர்களுக்கு வயற் சொந்தக் காரர்களால் சிற்றுண்டிகளும் தேநீரும் வழங்கப்பட்டது. களைபிடுங்குவிப்பதற்கு மாணவர்களினுதவியைப் பெற்றுக் கொள்ளும் ஆர்வம் விவசாயிகளிடையிலே கடந்த வருடங்களை விட இவ்வருடம் அதிகரித்துவிட்டது.

---

... னிய வாசம் ஏற்படலாம்.

**விருச்சிகம்-** இன்பத்தின் அணைப்பு இன்று தாராளமாகக் கிடைக்கும். காதலர்கள் வாழ்க்கையில் த்தடைகள் விலகும். பெற்ருேர் ஆதரவும் உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**தனுசு-** விஷப் பரீட்சையின் மூலம் விபரீதங்கள் விளையும் மயக்கும் மொழிகளால் பணத்தை இளக்க நேரிடலாம். இன்று சும்மா இருப்பதே சுகம்.

**மகரம்-** இலட்சியப் பாதையில் வெற்றி நடை போடுவீர். உயர்வட்டத்து அன்பும் அவசியம் கிடைக்கும். பதவி உயர்வுக்கும் இடம் உண்டு.

**கும்பம்-** கடமையில் ஆர்வம் பிறக்கும். இதன் மூலம் புதிய பாதை திறக்கும். வெளியிடத் தொடர்புகளில் நல்ல திருப்பம் ஏற்படும்.

**மீனம்-** நீண்டநாள் கொடுக்கல் வாங்கல் இன்று நிவர்த்தியாகும். சுற்ருடலில் மதிப்புஉயரும். பெரிய மனிதர்களின் ஆதரவும் பெருகும்.




நெல் விளைச்சலைப் பூச்சி குறைக்கிறதா?

டிப்ரறெக்ஸ்

பாவித்துப் பூச்சிகளை ஒழியுங்கள்

BAYER




டிப்ரறெக்ஸ் - ஐங்கோண மூட்டுப் பூச்சி, தண்டு ஈ, வெண்ணுண்ணி, அறக்கொட்டியான், இலைக்கூட்டுப் புழு, இலை சுருட்டிப் புழு ஆகிய நெற் பூச்சி புழுக்களையும் காய்கறி, புகையிலைப் பயிர்களைப் பாதிக்கும் இலையரிப் புழுக்களையும் அழிக்கும்.

டிப்ரறெக்ஸ் - ஒரு பேயர் தயாரிப்பு. அது நம்பிக்கையான, விஷயமறிந்த விநியோகஸ்தரிடம் கிடைக்கும். இலவச அறிவுரைச் சேவைக்குத் தொடர்பு கொள்ளுங்கள்.

பயிர்களைக் காத்துப் பணலாபம் பெறப் பாவியுங்கள்—பேயர் விவசாய ரசாயனப் பொருள்கள்.

உற்பத்தியாளர்;
பேயர்,
ஜெர்மனி.

இலங்கையில் அடைத்து விற்போர்:
ஹெக்கெம் லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி
கொழும்பு 10.

P.0154


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

அரசியல் அதிகாரம் என்பது வாழ்க்கையின் ஒவ்வொருதுறையிலும் மக்கள் தங்களது நிலைமையைச் சீர்திருத்த உதவுகின்ற ஒரு சாதானமேயல்லாது சாதனத்தின் மூலம் அடைகின்ற இறுதிபலனுகாது.

— மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49 Jaffna Telephone: 889.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் கார்த்திகை மாதம் 9-ந் திகதி (24-11-69)


## இந்திய காங்கிரஸ் அரசியல்

இந்தியாவிலே ஆளும் கட்சியானகாங்கிரஸில்பெரும் பிளவு ஏற்பட்டு ஆட்சிமன்றத்திலும் வெளியிலும் போட்டிகளும் வேற்றுமைகளும் அதிகரித்துவருவதைப் பார்க்கையில் அந்நாட்டிலே இனி ஸ்திரமான அரசாங்கமும், அமைதியும் நீடிக்கமுடியுமா என்ற சந்தேகமும் கவலையும் ஏற்படுவதாகவுள்ளது

புதுடில்லியிலே பிரதமர் இந்திராவின் அழைப்பின் மீது போட்டி காங்கிரஸ் கமிட்டி கூடி, திரு. நிஜலிங்கப்பாவைத் தலைமைப் பதவியிலிருந்து நீக்கியதுடன் இடைக்காலத் தலைவராக திரு. ஸி. சுப்பிரமணியத்தைத் தெரிவுசெய்துள்ளது. இது பிரதமர் இந்திராவை காங்கிரஸிலிருந்து வெளியேற்றியதற்கான போட்டி நடவடிக்கை போலும்!

சின்டிகேட் காங்கிரஸினுல் வெளியேற்றப்பட்ட தலைவர்கள், இந்திரா காங்கிரஸினுல் மீண்டும் நியமிக்கப்படுகின்றுர்கள். இதேபோக்கில் காரியங்கள்நடப்பதாயின் பிளவுபட்ட காங்கிரஸ், தற்கொலைப் போராட்டத்தில் ஈடுபட்டு, நாட்டின் அமைதியைக் கெடுப்பதுடன், ஸ்திரமான ஆட்சியுமில்லாமல்போவதாக இருக்கும்.

இதுவரை நல்லவேளையாக இந்தியா சுதந்திரமடைந்ததுமுதல், அங்கு ஸ்திரமான அரசாங்கம் இருந்துவருகின்றது. இப்போது ஜனதிபதி கிரி அவர்களும் பிரதமர் இந்திரா உள்ளிட்டு சில தலைவர்களும், பிரிட்டிஷ் ஆட்சியால் ஏற்பட்ட ஒரு சீரான நிர்வாகமுறையும் இருந்துவருவதால், நமது அண்டை நாடான இந்தியா இந்த பெரிய அரசியல் நெருக்கடியை வெற்றிகரமாக சமாளிக்குமென்ற ஒருவித நம்பிக்கை நிலவுகின்றது. பிளவுபட்ட காங்கிரஸிலே எந்தப் பகுதி, யார் வெற்றிபெறுவர் என்பது முக்கிய கேள்வியல்ல. இந்தியாவிலே ஸ்திர

யங்களில் மக்களால் தெரிவு செய்யப்பெற்ற பிரதிநிதிகளுக்கிடையே ஒற்றுமையும் ஒத்துழைப்புமில்லாததால், பல ராஜ்ய அரசுகள் சீராக நடைபெறமுடியாமல் தலைமை அரசாங்கமே நிர்வாகத்தை ஏற்கவேண்டியதாயிற்று. ஆனுல் தலைமையிலே ஸ்திரமான ஆட்சியில்லாமற் போகுமாயின் ராஜ்யங்களைப்பற்றி கேட்கவேண்டியதில்லை. இந்தியாவின் அரசியல் ஒற்றுமையும் குலைந்து பலபிரிவினைச் சக்திகளும் கிளம்பிவிடக்கூடும். இது இந்தியாவுக்கு எவ்வளவு பெரியசோதனை என்பதை விளக்கத்தேவையில்லை.

அகிலஇந்திய காங்கிரஸ் கமிட்டியிலே மொத்தம் 705 பேர்களுள், 450 பேர்களுக்குமேல் புதுடில்லியில் கூடி பிரதமர் இந்திராவை ஆதரித்துள்ளதாகக் கூறப்படுகிறது. ஆனுல் இந்த எண்ணிக்கை தவறு என்று சின்டிகேட் காங்கிரஸ் மறுத்துள்ளது. இந்திராவின் காங்கிரசுக்கு அதிக ஆதரவு இருப்பதாக வைத்துகொண்டாலும், ஆட்சிமன்றத்திலே அவருக்கு பெரும்பான்மைபலம் இல்லை. தி. மு. க., தனிப்பட்டவர்கள், கம்யூனிஸ்ட் முதலிய வேறு கட்சிகளின் ஆதரவை நம்பித்தான் அது நீடித்திருக்கமுடியும்.

இந்த நிலைமையில் அவர் 1972-ம்வருடம்நடைபெறும் பொதுத்தேர்தல்வரைஆட்சிப் பொறுப்பை திறமையாக நடத்திவரமுடியுமா என்பதைப்பற்றி திட்டமாக எதுவும் கூறுவதற்கில்லை. ஆனுல் ஒன்று இரு காங்கிரஸ்களுக்கிடையேயும் ஒருவித சமரசம் ஏற்படுத்த கடைசிமுயற்சிகள் நடப்பதாகச் செய்திகள் கூறுகின்றன. கொள்கையிலோ, வேலைத்திட்டங்களிலோ கருத்துவேற்றுமை இல்லாததாலும், சில தலைவர்களிடையே உள்ள தனிப்பட்ட மனஸ்தாபங்களே இந்த நெருக்கடிக்குக் காரணமானதாலும் இந்தப்

## காங்கிரஸ் நெருக்கடி ஒரு கண்ணோட்டம்

# காமராஜர் துரத்துகிருர் இந்திரா அணைக்கிருர்

## சுப்பிரமணியத்துக்கு ஏன் இத்தனை செல்வாக்கு?

எதிர்பார்த்தபடியே புதுடில்லியில் திருமதி காந்தியின் ஆதரவாளர்களால் அழைக்கப்பட்ட அகில பாரத காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் 400 பேருக்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் கலந்துகொண்டிருக்கிருர்கள். 494 பேர் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றினுர்கள் என்று கடைசியாகக் கிடைத்த ஒரு செய்தி கூறியது, ஏராளமானவர்கள்வர முடியாததால் தமது ஆதரவை செய்திகள் மூலம் தெரிவித்திருக்கிருர்களாம்.

இத்தனைபேர் கூட்டத்தில் கலந்து கொண்டிருப்பார்கள் என்பதை சின்டிகேட் ஆதரவாளர்கள் ஒப்புக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. இந்த எண்ணிக்கைபற்றி சந்தேகம் தெரிவித்து ஏற்கனவே பத்துப்பேர் அறிக்கை வெளியிட்டிருக்கிருர்கள். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியைக் கூட்டும்படி கோரி 400 பேருக்கு மேற்பட்ட அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அங்கத்தவர்களின் கையெழுத்துகளுடன் சமர்ப்பித்த மகஜர் குறித்தும் இப்படித்தான்சின்டிகேட் குழுவினர் கருத்து வெளியிட்டார்கள். கையெழுத்துக்களில் பலவும் பொய்யானவையென்று அவர்கள் கூறினுர்கள்,

ஆனுல் அவர்களுக்குகட்சியில் எவ்வளவு தூரம் செல்வாக்கு இருக்கிறதுஎன்பதை காங்கிரஸ் ஆட்சிமன்றக்கூட்டம் ஏற்கனவே தெளிவாக்கி விட்டது. இப்பொழுது அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியும் சின்டிகேட் தலைவர்களுக்கு இருக்கும் செல்வாக்கை தெளிவாக்கிவிட்டது. இனிமேலாவது சின்டிகேட் தலைவர்கள்சற்று தமது நிலையை நிதானமாக சிந்தித்துப் பார்ப்பது நல்லது. அரசியல் தலைவர்கள் முற்றும் உணர்ந்த முனிவர்களல்லர். தவறுகள் இழைக்காத கட்சியும் இருக்க முடியாது. தவறு செய்வது மனித பலவீனம் தவறுகள் இருதரப்பிலும் நிகழ்ந்திருக்கலாம். எனவே இரு தரப்பினரும் இதனை உணர்ந்து

பாட்டீல் போன்றவர்கள் சற்று விட்டுக்கொடுத்து புதிய சந்ததியினரின் அபிலாஷைகளுக்கு மதிப்பளிக்க முயன்றிருக்கலாம், அதே சமயம் திருமதி காந்தியின் சார்பினராவது இன்னும் சற்று இணங்கிப் போக முனைந்திருக்கலாம். ஆனுல் சட்டம் ஒழுங்கு என்ற அடிப்படையில் பெரிய தலைவர்கள் நடவடிக்கைகளில் இறங்கியதுதான் நிலைமை மோசமானதற்குக் காரணம் என்று சொல்ல வேண்டும். ஜனநாயக அமைப்பில் பெரும்பான்மைக் கருத்துக்கு மதிப்புஅளித்துத்தான் ஆகவேண்டும் என்ருல் இன்று உருவாகியுள்ள நிலைமையை பெரிய தலைவர்கள் ஒப்புக்கொண்டாக வேண்டும், அப்படி செய்வதாயின் அது புதிய நாகரிக சம்பிரதாயமொன்றை உருவாக்குவதாகவும் பெரிய தலைவர்களின் மதிப்பை உயர்த்துவதாகவும் அமையலாம். ஆனுல்.........

0 0 0

திரு சி, சுப்பிரமணியத்தை எவ்வளவுக்கெவ்வளவு அரசியல் அரங்கிலிருந்து ஒழித்துவிட காமராஜர் முயற்சி எடுக்கின்ருரோ அவ்வளவுக்கு திருமதி காந்தி அவரை முன்னுக்கு கொண்டுவருவதில் ஆர்வம் காட்டி வருகிருர். பரிதாபாத் காங்கிரஸ் மகாநாட்டுக்கு வங்கி தேச உடைமை உட்பட சோஷலிஸப்பொருளாதார திட்டமொன்றை திரு, சுப்பிரமணியம்

— பேனா —

தாக்கல் செய்தார், அதனை மூத்த தலைவர்கள் ஒரேயடியாக புறக்கணித்து உதாசீனம் செய்துவிட்டார்கள். காங்கிரஸ் ஏற்கனவே நிறைவேற்றிய தீர்மானங்களின் அடிப்படையிலேயே இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டது என்று கூறப்பட்டபோதிலும், அது திரு. சுப்பிரமணியத்தின் சொந்தத்திட்டம் என்று திரு. நிஜலிங்கப்பா போன்றவர்கள் கிண்டல் செய்தார்கள். ஆனுல் பெங்

நிர்ப்பந்தங்களுக்குள்ளாக்கப்பட்டார் அவர் விலகியதும் திரு. காமராஜரின் ஆதரவாளர் திரு, சக்கன் தலைவரானுர். அதோடு காங்கிரஸ் காரியக் கமிட்டியிலிருந்தும் சுப்பிரமணியம் விலக்கப்பட்டார்.

அதற்கு முன்னரே திரு. சுப்பிரமணியத்தை எப்படியும் ஆட்சிமன்றத்துக்கு தெரிவு செய்துவிடுவதற்கு பிரதமர் ஏற்பாடு செய்வதாக செய்திகள் வந்தன. இப்பொழுது திரு நிஜலிங்கப்பாவுக்கு பதில் இடைக்கால தலைவராகதிரு. சுப்பிரமணியத்தை புதுடில்லியில் கூடிய அகில பாரத காங்கிரஸ் கமிட்டியினர் தெரிவுசெய்திருக்கின்றனர். இதுவும் திரு. சுப்பிரமணியத்தின் தனிப்பட்ட வெற்றியல்ல. திருமதி காந்தியின் செல்வாக்கே இதற்கு காரணம்.

இனி அவர் அகில பாரத காங்கிரஸ்கட்சியின் செல்வாக்குமிக்க தலைவர்களில் ஒருவராக முன்னேறவும் இடம்உண்டு. திருமதி காந்தியிடம் திரு. சுப்பிரமணியத்துக்கு இத்தனை செல்வாக்கு ஏற்பட்டிருப்பதற்கு அவர் சாதாரண மக்களின் அபிலாஷைகளைச் சரியாகப்புரிந்து கொண்டிருக்கிருர் என்பது மட்டும் காரணமல்ல. புதிய தலைமுறையினரின் அபிலாஷைகளை அவர் சரியாகப் பிரதிபலிக்கிருர் என்பதுதான் உண்மையான காரணம்.

புதிய தலைமுறையினர்தான் நாட்டின் எதிர்கால சிற்பிகள் அவர்களைப்பயிற்றுவிப்பதும், அவர்களுக்கு வழிவகுத்துக் கொடுப்பதும் பழைய தலைமுறையினரின் கடமை. இதற்கு சின்டிகேட் தலைவர்கள் முட்டுக்கட்டையாக தொடர்ந்து இருப்பார்களானுல் எதிர்காலச்சந்ததியினர் அவர்களைமனமுவந்து போற்றுவர் என்று எதிர்பார்க்கமுடியாது.

## நினைவு சொற்பொழிவு

யாழ்ப்பாணம், திங்வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியின் அதிபராகவும் கல்லூரித் தலைவராகவும் முப்பது வருடங்களுக்கு மேலாகசேவையாற்றிய காலஞ்சென்ற வண டாக்டர் எம். கே. பங்கரை நினைவு கூருமுகமாக வருடந்தோறும் இக் கல்லூரியினரால் நடத்தப்படவிருக்கும் சொற்பொழிவுகளில் இந்த வருடம் வடஇந்தியாவைச் சேர்ந்த சிறந்தஅறிஞரான டாக்டர் கே ஜி சாயிடெய்னின் சொற்பொழிவு இடம்பெறவிருக்கிறது.

டாக்டர் சாயிடெய்னின் சொற்பொழிவு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் அடுத்தமாதம் 17,18 ம் திகதிகளில் தினமும் மாலை 6 மணி தொடக்கம் 7 மணி வரை நடைபெறும். இவர் 'நவீனசமூகத்தில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடிகள்' எனும் விஷயம்பற்றி சொற்பொழிவாற்றுவார்.

## மிளகாய்ச் செய்கைப் போட்டி

## ஜெயராஜ் எழுதுவது..

நேற்று திருக்கார்த்திகையல்லவா? நல்லூருக்கு வரும்படி அன்பு அழைப்புவந்தது அங்கு கைலாசத்து உச்சியிலே முருகக்கடவுள் வள்ளி, தேவயானையுடன் அழகாக இருந்து தனது பக்தகோடிகளுக்கெல்லாம் அருள் செய்துகொண்டிருந்தார்.

இராவணன் யாழ் மீட்டுக் கொண்டிருந்தான். காரைக்காலம்மை, நாரதர், அப்பர் சுவாமிகள் எல்லாரையும் அம்மலையிலே 'கண்டேன். கைலாசபதியைக் காணவில்லையே என்றுநினைத்தேன் நினைத்ததும், ''என்னை யாரென்று நினைத்தாய்''? என்று உள்ளிருந்தேகேட்டான் முருகன் பிறகுதான் புரிந்தது இருவரும் ஒன்றென்று.

''ஏழைபங்காளன்'' என்று இறைவனை திருவாசகம் கூறுவதால், இறைவனும் ஓர் ஏழைதானே என்று நினைத்திருந்தேன். பல கோவில்களில் சுவாமி மிக ஏழ்மையாகவே காணப்படுகிருர். ஆனுல் நல்லூரிலே முருகனைப்பார்த்தால்பெரிய பணக்காரரென்றுதான் பட்டது. எல்லாச்செல்வமும் அவருடையது தானே! அவர் ஏழையாக இருந்தால், அவரால் என்ன உதவி செய்ய முடியும்? அவரிடம் யார் தான் செல்வர்.

இறைவனை ''ஏழை பங்காளன்'' என்ருல், செல்வந்தருக்கு அவர் விரோதியா? அந்தச்செல்வங்களைக்கொடுத்ததும் அவ்விறைவன் தானே என்று ஒரு பெரியவரை கேட்டேன். 'ஏழை' என்பதற்குப் பெண் என்று ஒரு கருத்துள்ளதென்றும், பெண்ணைத் தன்னில் ஒரு பாகமாக வைத்துள்ளதால் தான், அவருக்கு ''ஏழை பங்காளன்' என்று விளக்கினுர் அவர்,

0 0 0

கோவிலில் பல சந்நிதிகளிலும் பூசை நடக்கையில் ஏன் அவ்வளவு தள்ளுமுள்ளு? ''தீபாராதனையாகும் போதுதானு அங்கு நீங்கள் இருக்கிறீர்கள்?'' என்று முருகனைக்கேட்டேன். அவர் சிரித்துவிட்டு, ''நான் எப்போதும் எங்கும் தான் இருக்கிறேன். இங்கு வரவேண்டுமென்று அவசியம் கூடஇல்லை. வீட்டிலிருந்தே என்னை நினைத்தால் போதும்; நினைப்பவர் மனதிலே கோவில்கொண்டு விடுவேன் என்ருர்.

சிவப்பு மலர்களால் முருகனுக்கும், அவரது இருசக்திகளுக்கும் தலையிலே வட்டமாக முடிசூட்டியதுபோல அலங்சரித்தது, கண்ணையும் மனதையும் கவர்ந்தது. மலர்களைக்கொண்டு அவ்விதம் கலைபழகுடன் அலங்கரித்தவர்களைப் போற்றவேண்டும் சுவாமியை அலங்கரிப்பதே ஓர் அருங்கலையாகும்.

தீபாராதனை நடக்கையில் சுற்றிலும் பார்த்தேன். எங்கும் முருகனும், வள்ளி தேவயானைகளுமாகக் காட்சியளித்தனர். ஒரே பக்திமயம் இவ்வளவு பக்தியுள்ள ஒரு சமூகத்துக்கு ஒரு தீங்கும் வராது. இன்பமே எந்நாளும் துன்பமில்லை என்ற நம்பிக்கையுடன் திரும்பினேன்.

வருகிறவழியிலே மதுரை திருஞானசம்பந்தர் ஆதீன கிளை மடத்திலே மேளவாத்தியம், மணியோசை எல்லாம் கேட்டன. அங்கும் முருகனுக்கு விசேஷ வழிபாடு, திருவுலா எல்லாம் நடந்தன. பிரசாதம்கூட கிடைத்தது. மடாலயங்களிலே அன்ருட ஏழைகளுக்கு அன்னதானம் நடக்கும்படி செல்வந்தர்கள் செய்வார்களாயின், சமூகத்துக்கு நல்ல தொண்டாவதுடன், ஆஸ்திகமும்பெருகி பட்டினிப்பிரச்னையும் தீரலாமல்லவா? இந்த மடம் வர வர சிறந்தமுறையில் பல வகைகளில் சமூகத்துக்கு தொண்டாற்றி வருவது

இன்று சோமவார விரதம். இவ்விரதத்தை அனுட்டிக்கும் அன்பர்கள் சிவபெருமானைத் துதித்து வழிபாடு செய்வதற்கு உதவியாக இச்சிவத்துதி வெளியிடப்படுகிறது. மார்க்கண்டேயர் மரணபயம் நீங்க சிவபெருமானை வடமொழியில் துதித்த இச்சிவத்துதியை க. வை. ஆ. சர்மா தமிழில் தருகிருர்.

## சந்திர சேகர அட்டகம்

சந்த்ர சேகர! சந்த்ர சேசுர
என்றும் யானுன் அடைக்கலம்
சந்த்ர சேகர சந்திர சேகர!
இன்றெனை நீ காத்தருள்!

வெள்ளி யங்கிரி மந்தி ரத்தினில்
மணியிடுக்கை கொள் வேந்தனை
நள்ள ராவிறை நாணக் கல்விலில்
ஏவு நாரண னுக்கியே
கொள்ளு முப்புரம் பொடிபடச் சுரர்
கோவுஞ் செய்துதி சேரவே
எள்ள ரும்புகழ் இந்து சூடியை
எய்தினேன்யம னென்செயும் (சந்த்ர)

ஐந்த ருக்களின் நறும லர்த்தவம்
அணிபெ றும்பத அழகனை
சந்த நெற்றியின் நாட்டத் தீ மதற்
சாம்ப ராக்கிய அருளனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவதால், நமது அண்டை நாடான இந்தியா இந்த பெரிய அரசியல் நெருக்கடியை வெற்றிகரமாக சமாளிக்குமென்ற ஒருவித நம்பிக்கை நிலவுகின்றது. பிளவுபட்ட காங்கிரஸிலே எந்தப் பகுதி, யார் வெற்றிபெறுவர் என்பது முக்கிய கேள்வியல்ல. இந்தியாவிலே ஸ்திரமான ஒழுங்கான அரசாங்கம் புதுடில்லியில் ஆட்சி புரியமுடியுமா? நாடெங்கும் அதன் அதிகாரம் செல்லக், கூடியதாக இருக்குமா? வெளிநாடுகளின் மதிப்பை அந்த அரசாங்கம் நீடித்துப் பெறமுடியுமா என்பதே முக்கிய கேள்வி.

இதேபோல் இந்திய குடியரசிலுள்ள பல ராஜ்ய அரசாங்கங்களும் சீராக நடக்க முடியுமா என்ற கேள்வியும் கிளம்பியது. சில ராஜ் ... ஏற்படுத்த கடைசிமுயற்சிகள் நடப்பதாகச் செய்திகள் கூறுகின்றன. கொள்கையிலோ, வேலைத்திட்டங்களிலோ கருத்துவேற்றுமை இல்லாததாலும், சில தலைவர்களிடையே உள்ள தனிப்பட்ட மனஸ்தாபங்களே இந்த நெருக்கடிக்குக் காரணமானதாலும், இந்தப் பிளவினால், இனி தமிழகம் போன்ற ராஜ்யங்களில் காங்கிரஸ் தலைதூக்கமுடியாமற் போகுமாதலாலும், தலைவர்கள் நிதானமாக யோசித்து ஒருவித சமரசத்துக்கு வருவது இப்போதும் அசாத்தியமல்ல. ''ஒற்றுமைக்கான கதவுகள் இன்னமும் திறந்திருக்கின்றன'' என்று பிரதமர் இந்திரா கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

லது. அரசியல் தலைவர்கள் முற்றும் உணர்ந்த முனிவர்களல்லர். தவறுகள் இழைக்காத கட்சியும் இருக்க முடியாது. தவறு செய்வது மனித பலவீனம் தவறுகள் இருதரப்பிலும் நிகழ்ந்திருக்கலாம். எனவே இரு தரப்பினரும் இதனை உணர்ந்து பிளவுபட்ட கட்சியைஒருங்கிணைப்பதற்குஇந்தக்கடைசி நிமிடத்திலாவது முயற்சி எடுக்கலாம்.

தவறுகளை ஒப்புக்கொண்டு இரு தரப்பினருமே மீண்டும் வேற்றுமைகளைக் களையமுன்வருவார்களானால் இந்தியாவில் ஸ்திரமான ஓர் ஆட்சியை விரும்பும் எல்லாருமே வரவேற்பார்கள், ஆனால் இமாலயத்தவறாய் இருந்தாலும் வெளிப்படையாக ஒப்புக்கொள்வதற்கு இந்தியாவில் இன்னொரு தடவை மகாத்மாகாந்திதான் பிறக்க வேண்டும்

இதுவரை நடந்து வந்துள்ள சம்பவங்கள் ஏட்டிக்குப் போட்டி மனப்பான்மையிலேயே நடைபெற்று வந்துள்ளன.

முதிய தலைவர்களான நிஜலிங்கப்பா, காமராஜர், மொரார்ஜிதேசாய் எஸ்.கே காங்கிரஸ் ஏற்கனவே நிறைவேற்றிய தீர்மானங்களின் அடிப்படையிலேயே இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டது என்று கூறப்பட்டபோதிலும், அது திரு. சுப்பிரமணியத்தின் சொந்தத்திட்டம் என்று திரு. நிஜலிங்கப்பா போன்றவர்கள் கிண்டல் செய்தார்கள். ஆனால் பெங்களூர் கூட்டத்தில் நிராகரிக்கப்பட்ட சுப்பிரமணியத்தின் திட்டத்தின்அடிப்படையில் அமைந்த பத்தம்சத் திட்டமொன்றை பிரதமர் இந்திரா சமர்ப்பித்தபோது தலைவர்கள் திண்டாடிப்போனார்கள். அது பிரதமரால் சமர்ப்பிக்கப்பட்ட திட்டம் என்பதாலும், மக்கள் மத்தியில் அந்தத் திட்டத்துக்கு அதிகபிரசாரம்கிடைத்திருந்ததாலும் புறக்கணிக்கமுடியாமல்போய்விட்டது. இந்தத்திட்டம் திருமதி காந்தியினுடையது என்பதைவிட திரு. சுப்பிரமணியத்தினுடையது என்பதே உண்மை நிலையாகும்.

இடையில் நடந்த சம்பவங்களின் பின்னர், தமிழ் நாட்டு காங்கிரஸ் கட்சித் தலைமைப்பதவியிலிருந்துவிலகும்படி திரு. சுப்பிரமணியம் பார்க்கமுடியாது.

## மிளகாய்ச் செய்கைப் போட்டி

பச்சிலைப்பள்ளி, ஞாயிறு

எல்லாக் கல்வி வட்டாரங்களிலும் 1.11.1669 தொடக்கம் 31.2.1970 வரையிலான கால எல்லைக்குள் மிளகாய்ச் செய்கைப் போட்டி ஒன்றைக் கல்வித் திணைக்களம் நடாத்தத் தீர்மானித்துள்ளது. இப் போட்டியில் எல்லாப்பாடசாலைகளும் பங்குகொள்ள வேண்டுமென்று திணைக்களம் அறிவித்துள்ளது. இப் போட்டி வெற்றிகரமாய் முடிவதற்கு விவசாயப் பகுதியார் வேண்டிய உதவிகளைச் செய்வார்களெனக் கூறப்படுகிறது. ஒவ்வொரு மாத முடிவிலும் வட்டாரக்கல்வி அதிகாரி கல்வி அமைச்சருக்கு அனுப்பும் அறிக்கையைக்கொண்டு போட்டியின் முடிவுகள் தீர்மானிக்கப் படுமெனத்தெரிகிறது.


தற்பொழுது அச்சில்...

ஏராளமான தகவல்கள்

நவீன அமைப்பு

ஈழநாடு

**தினக் குறிப்புகள்**

**1970**

★ ஈழநாடு **POCKET DIARY**

(one week to an opening) 75 சதம்

★ ஈழநாடு மாணவர் தினக்குறிப்பு

ரூபா 1-15 சதம்

★ ஈழநாடு தினக்குறிப்பு

(வழமையானது) ரூபா 1-35 சதம்

'ஈழநாடு' பத்திரிகை ஏஜண்டுகளுக்கும்!
வியாபாரிகளுக்கும் விசேஷ கழிவுகள் தரப்படும்.

விபரங்களுக்கு:

தினக் குறிப்பு 1970,
த. பெ. எண். 49,
ஈழநாடு,
யாழ்ப்பாணம்.


# ஸ்கந்தா, மகாஜன இவவருட சாம்பியன்கள்

## 'உதைபந்தாட்டத்தில் யாழ்ப்பாணம் அதிக ஆர்வம் காட்டுகிறது'

### மேயர் பாராட்டு

**யாழ்ப்பாணம், திங்.**

**''இலங்கையின் ஏனைய பாகங்களைக் காட்டிலும் உதைபந்தாட்டத்தில் கூடிய ஆர்வம் காட்டுமிடம் யாழ். மாவட்டம் தான். அதற்கு உதாரணம், இன்று இப்போட்டியை காண்பதற்கு இங்கு திரண்டு வந்த மக்கள் கூட்டம். யாழ். மாவட்டத்தில் சிறந்த உதைபந்தாட்ட வீரர்களை வருங்காலத்தில் உருவாக்குவதற்கு பாடசாலைகளின் உதைபந்தாட்டப் பயிற்சியாளர்கள் கூடிய கவனம் எடுக்கவேண்டும்''**

இவ்வாறு யாழ். பாடசாலை விளையாட்டுச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட 'ஏ' பிரிவு உதைபந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டத்துக்கு பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்ப்பாண மேயர் திரு. சி. நாகராசா கூறினார்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரிக்குமிடையில் யாழ். விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற விறுவிறுப்பான உதைபந்தாட்டப் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இப்போட்டி தொடங்கி 2 நிமிடங்களுக்குள்ளேயே ஸ்கந்தா கோஷ்டி ஒரு கோலைப் பெற்றது. இந்தக் கோலை மகாஜனக் கோஷ்டியின் பின்னணி வீரர்களே எதிர்பாராத விதமாக தமது கோல்வாயினுள் தட்டி விட்டனர். இடைவேளைவரை மகாஜனக் கோஷ்டி கோல்கள் எதுவும் போடவில்லை.

### ரசிப்பான ஆட்டம்

இடைவேளையின் பின் ஆட்டம் மிகவும் ரசிப்பாகக் காணப்பட்டது. இரு கோஷ்டியினரும் பல கோல்களைப் போடும் சந்தர்ப்பங்களை நழுவ விட்டுவிட்டனர். ஆட்டம் முடிவடைவதற்கு 10 நிமிடங்கள் இருக்கும்போது மகாஜனக் கோஷ்டியின் முன்னணி வீரர் ராஜகாந்தன் மின்னல் வேகத்தில் ஒரு கோலைப் போட்டார். இதன்பின் ஆட்டம் முடிவடையும் வரை இரு கோஷ்டிகளும் மேலும் கோல்களைப் போடாமையால் ஆட்டம் சரிசமனாக முடிவடைந்ததால் இரு கோஷ்டிகளும் இவ்வருடச் சாம்பியன்களாகத் தெரியப்பட்டன.

இப் போட்டிக்கு திரு. தேவபாலன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

(தே, நி)

ஏவு நாரண னுக்கியே
கொள்ளு முப்புரம் பொடிபடச் சுரர்
கோவுஞ் செய்துதி சேரவே
எள்ள ரும்புகழ் இந்து சூடியை
எய்தினேன்யம னென்செயும் (சந்த்ர)

ஐந்த ருக்களின் நறும லர்த்தவம்
அணிபெ றும்பத அழகனை
சந்த நெற்றியின் நாட்டத் தீ மதற்
சாம்ப ராக்கிய அருளனை
பந்த நீற்றொளிர் மேனி யன்பவ
மாற்று வன்பவ னழிவிலன்
அந்த மின்றியே இந்து சூடியை
அண்மி னேன்யம னென்செயும்? (சந்த்ர)

மங்கு யானைம தங்கெ டுத்துரி
மானு றுத்தியே போர்த்தவன்
பங்க யாசனன் பதும லோசனன்
பண்ணு பூசைப் பதாம் புயன்
கங்கை யன்னைதன் அலைசெ றிந்துதண்
களியு றும்வெண் சடாதரன்
இங்கு ளத்தினில் இந்து சூடியை
இருத்தி னேன்யம னென்செயும்? (சந்த்ர)

இயக்க மன்னன்தன் இனிய தோழனை
எற்க ணன் அகி யணியனை
வியன்கு லக்கிரி தனையை இன்புற
வேட்டி டந்தரு வேடனை
மயக்கு நீல்விட மாக ளத்தனைப்
பரசு மான்கொள் கரத்தனை
நயக்க வென்னுளே இந்து சூடியை
நம்பி னேன்யம னென்செயும்? (சந்த்ர)

மண்ட லித்துள நாக குண்டலம்
மன்னு சேவடு மூர்த்தியை
எண்ணும் நாரதன் முதல முனிவர்கள்
ஏத்து நாயக இறைவனை
நண்ணும் அந்தக னழிய அமரர்கள்
நாட மன்மத வைரியை
உண்ண யப்புற இந்து சூடியை
ஓம்பினேன் யம னென் செயும்? (சந்த்ர)

பிறவி நோயழி பெருவ யித்தியன்
பின்னும் ஊறு த விர்ப்பவன்
மறங்கொள் தக்கன மகம ழித்தவன்
மன்னு முக்குண முக்கணன்
முறையின் போகமே மோக்க மாள்பவன்
முற்று பாபம ழிப்பவன்
நிறைய உள்ளகம் இந்து சூடியை
நிறுத்தி னேன்யம னென்செயும்? (சந்த்ர)

அன்பர் இன்புற ஆண்டு பூசிக்கும்
ஆசை வாசவி பூதியன்
முன்பு பூதமு தற்ப ராத்பரன்
முடிவி லாதவ னுத்தமன்
பன்னும் எல் லரி கஞ்சலம் எரி
பாரொ டெண்வளி அதிபனும்
மன்னி ளம்பிறைக் கருளும் ஐயனை
மருவி னேன்யம னென்செயும்? (சந்த்ர)

உலகை யாக்கிப்பின் ஓங்கு விப்பவன்
உவம னில்லாதொர் தத்பரன்
அலகி லண்டமெ லாமொ டுக்கியிங்
கான முத்திய ளிப்பவன்
அலகி லாவிளை யாட்டி ராப்பகல்
ஆடும் அக்கண நாயனை
இலகி ளம்பிறை சூடும் ஐயனை
எய்தி னேன்யம னென்செயும்? (சந்த்ர)

**துதிப்பயன்**

இயமனை யஞ்சியிம் மார்க்கண் டன்செயும்
இத்து திப்பய னேன்யம
பயம கல்வரே பண்பு டன்சிவ
பக்தி யோடிவை யோதுவோர்
வயமு றுந்திரு ஆயுள் நோயகல்
வாழ்வி னேடுயர் வெய்தியே
நயனு றப்பிறை சூடி யாரடி
நல்கும் இன்பு திளைப்பரே.

களுக்கு அன்னதானம் நடக்கும்படி செல்வந்தர்கள் செய்வார்களாயின், சமூகத்துக்கு நல்ல தொண்டாவதுடன், ஆஸ்திகமும்பெருகி பட்டினிப்பிரச்சினையும் தீரலாமல்லவா? இந்த மடம் வரவர சிறந்தமுறையில் பலவகைகளில் சமூகத்துக்கு தொண்டாற்றி வருவது போற்றத்தக்கது.

0 0 0

''செல்வன் கழலேற்றும் செல்வம் செல்வமே'' என்ற தலைப்புடன் கிடைத்த இரு பிரசுரங்கள் என் மனதைக் கவர்ந்தன. பெரியோர்களின் அருள்வாக்குகளும் பக்திப்பாடல்களும் நிறைந்துள்ள அப் பிரசுரங்கள், ''பேச்சடங்குமட்டும் முருகன் பெயர் சொல்லி பூச்சடலம் போக்கி அவன் அடிக்கே புக்காளான செல்வம்'' என்ற 16வயதில்இறைவடி சேர்ந்த வசந்தியின் நினைவாக வெளியிட்டுள்ளனர். அச் செல்வியின் பெயரால், அதேவயதுள்ள எளிய பெண்களுக்கு தேவையானதைச் செய்யின், அக் குழந்தையின் ஆத்மா பெரிதும் சாந்தியடையும். அது சமூக சேவையுமாகும்.

0 0 0

செல்வநெடுமாடஞ்
சென்று சேண் ஓங்கிச்
செல்வ மதி தேயச் செல்
வம் உயர்கின்ற,
செல்வர் வாழ் தில்லைச்
சிற்றம் பலமேய,
செல்வன் கழலேற்றுஞ்
செல்வம்
செல்வமே.
— திருஞானசம்பந்த
சுவாமிகள்.

புதுடில்லி, நவ. 21

'நிஜலிங்கப்பாவின் உருட்டல் மிரட்டல்களுக்கு எந்தக் காங்கிரஸ் காரர்களும் பயப்படவும் மாட்டார்கள அதற்கு மதிப்புக் கொடுக்கவும் மாட்டார்கள.' என்று திரு சி சுப்பிரமணியம் நிருபர்களிடம் பேசுகையில்கூறியுள்ளார்


## தேவை

அனுபவம் வாய்ந்த பாண் பிஸ்கட் போடும் தொழிலாளர்கள் தேவை. நேரில் சந்திக்கவும். நல்ல சம்பளம் கொடுக்கப்படும். உரிமையாளர் சு. மாணிக்கம், மயிலன் பேக்கரி, வியாபாரி மூலை, பருத்தித்துறை.

1559



இப்பத்திரிகை 'ஈழநாடு லிமிட்டெட்' ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம்சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு நவம்பர் மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org